பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில் செய்து
கொடுக்கப்படும்.

# உதயன்

விலை
ரூபா 3/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHANT
218H, Kasthuriar Road
JAFFNA.
T. Phone: 23794

சுடர்: 5 சுக்கில ஆண்டு தை மீ 29 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 14 (11-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 6

## வரதர் மீதான விசாரணையை சுங்கத் திணைக்களம் ஆரம்பித்தது

கொழும்பு, பெப். 11
வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் மீதான விசாரணை நடவடிக்கைகளை சுங்கத் திணைக்களம் ஆரம்பித்திருக்கிறது.

விசாரணைக்கான சுங்க அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் கொழும்பில் தமது பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் சிரேஷ்ட சுங்க கலெக்டர் திரு. ஹிங்கம கொழும்பில் தெரிவித்தார்.

இந்திய விமானப்படை விமானத்தில் பல தடவைகள் இந்தியாவுக்குச் சென்றதன் மூலம் குடிவரவு, குடியகல்வு சட்டங்களையும், சில தடைசெய்யப்பட்ட பொருள்களை இந்தப் பயணங்களின் போது கடத்தியதனால் சுங்கச் சட்டங்களையும் மீறியதாக திரு. வரதராஜப்பெருமாள் மீது வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின குற்றம் சுமத்தியது தெரிந்ததே.

இந்த விடயங்கள் தொடர்பாக திரு. வரதராஜப்பெருமாளுக்கு எதிராக இலங்கை அதிகாரிகள் விசாரணை நடத்துவார்கள் என திரு. ரஞ்சன் விஜேரத்தின அறிவித்திருந்தது தெரிந்ததே.

## 4 அம்சங்கள் குறித்தே அரசு - புலிகள் பேச்சு!

### தொடர்ந்து நடப்பதாகத் தகவல்

கொழும்பு, பெப்ரவரி. 11

★ வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைத்து புதிதாக தேர்தல் நடத்துதல்.
★ இந்தியப் படைகளை விலக்கிக் கொள்ளுவதைத் துரிதப் படுத்துதல்.
★ அதிகாரங்களைப் பரவலாக்கி வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
★ தமிழ் தேசிய இராணுவத்தைக் கலைத்தல்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது இந்த நான்கு அம்சங்கள் குறித்தே ஆராயப்பட்டு வருகின்றது.

பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயங்கள்பற்றி அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் கருத்தை அறிந்து வருவதற்காக வன்னிப்பகுதிக்குச் சென்றிருந்த திரு. யோகரட்ணம் யோகி தற்போது அங்கிருந்து திரும்பிவிட்டார்.

தலைநகர் திரும்பிய திரு. யோகி கொழும்புக்குவெளியே ஓரிடத்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மற்றொரு பிரமுகரான திரு. அன்டன் பாலசிங்கத்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## பால் விலையும் உயரும்!

கொழும்பு, பெப்.11
பாலின் கொள்வனவு விலையைப் பால் சபை அதிகரிக்கவிருக்கிறது.

இதன்படி மார்ச் முதலாம் திகதியில் இருந்து ஒரு லீற்றர் பாலின் கொள்விலை 5 ரூபா 80 சதத்திலிருந்து 7 ரூபா 50 சதமாக உயரும். (உ)

## மண்டேலா விடுதலையாவார்

ஜோஹனஸ்பேர்க், பெப். 11
கடந்த 27 ஆண்டுகளாச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தென் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா இன்று (ஞாயிறு) விடுதலை செய்யப்படுவார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப். டபிள்யு. டி. கிளெர்க் நேற்று இரவு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் முன் கண்ட தகவலை வெளியிட்டார். (முன்னர் வந்த செய்தி 7-ஆம் பக்கத்தில்)

## மின் கட்டணம் அதிகரிக்கும்

கொழும்பு, பெப். 11
வருகிற ஏப்ரல் மாதம் முதல் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவிருக்கிறது.

-இப்படி அதிகாரபூர்வ வட்டாரங்கள் அறிவித்தன. 1988-ஆம் ஆண்டு ஜனவரியில் தான் கடைசியாக மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

### ஒப்பந்தம் கைச்சாத்தான கையோடு

## அரசைக் கவிழ்க்க ராணுவச் சதி! எதிர்பார்த்ததாக ஜே. ஆர். தகவல்

### இந்தியப் படை இங்கு வந்த விதம் பற்றியும் விளக்கம்

கொழும்பு, பெப் 11
இந்திய, இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னர் இராணுவத்தின் உதவியுடன், அரசைச் கவிழ்க்கும் சதி ஒன்று இடம்பெறலாம் என்று அச்சப்பட்டேன்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சண்டே ரைம்ஸ்பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார். பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

"யார் இச்சதியை மேற்கொண்டிருப்பர் என்பது எனக்குத் தெரியாது. உணர்ச்சிமயப்பட்ட சிலர் சதி முயற்சியில் ஈடுபடலாம் என்று சந்தேகித்தேன். முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தினேன்.

கண்ணுக்குத் தெரியக்கூடிய விதத்தில் கொழும்புத் துறைமுகத்தில் யுத்தக் கப்பல்களைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படி நான் இந்தியாவைக் கேட்டுக்கொண்டேன். அதன்படி இந்தியக் கப்பல்கள்

(8-ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத்தில்

## பயிலுநர் ஆசிரியர் நியமனம் மார்ச் 5 க்கு முன்

யாழ்ப்பாணம், பெப் 11
யாழ். மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் நியமனங்களை மார்ச் ஐந்தாம் திகதிக்கு முன் வழங்குமாறு கல்வித் திணைக்களம் யாழ். பிராந்திய அலுவலகத்தைப் பணித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

இந் நேர்முகப் பரீட்சைகளை விரைவாக நடத்தி மார்ச் ஐந்தாம் திகதிக்கு முன்பாக நியமனங்களை வழங்குமாறு கல்வித் திணைக்களம் பணிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி நேர்முகப் பரீட்சைகளை நேரடியாகப் பார்வையிட்டு வருகிறார்.

கோட்டக்கல்வி அதிகாரிகள் மேற்பார்வை செய்து வருகிறார்கள். (இ-3)

## யாழ். ரயில் நிலையத்துக்கு வானொலி தொடர்புக் கருவி

யாழ்ப்பாணம், பெப். 11
யாழ் ரயில் நிலையத்துக்கு வானொலித் தொடர்புக் கருவி ஒன்று வழங்கப்பட உள்ளது. இது இன்று இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே இங்கு ஒரு வானொலித் தொடர்பு சாதனம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் அது ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் பறித்துச் செல்லப்பட்டது.

வானொலித் தொடர்புச் சாதனம் பறித்துச் செல்லப்பட்டதை அடுத்து யாழ் நகருக்கு சேவையாற்ற இருந்த மெயில் ரயில் சேவையும், இன்ரர்சிற்றி ரயில் சேவையும் ஒத்திவைக்கப்பட்டன.

தற்பொழுது வானொலி தொடர்பு சாதனம் வந்து சேருவதை அடுத்து இந்த ரயில் சேவைகளையும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (க-9)

## உரிமைகளை வென்றெடுக்கும் வரை புலிகளின் போராட்டம் தொடரும்

### வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் தீபன்

வடமராட்சி, பெப். 11
தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும்வரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும். போராளிகளை இழந்தாலும் போராட்டம் தொடரும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வடமராட்சிப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. தீபன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் மேஜர் சோதியாவின் அஞ்சலிக் கூட்டத்தில் சலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. தீபன் முன்கண்டவாறு சொன்னார்.

நெல்லியடி விக்னேஸ்வராக் கல்லூரி முன்றலில் நேற்று மாலை அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. திரு. கி.றே. சலேசியஸ் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

மேஜர் சோதியாவின் பெற்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை சிறுவர்களுக்கான வெள்ளைத்துணி மீற்றர் ரூ. 35

### மான்ய அடிப்படையில் கிடைக்கும்

கொழும்பு, பெப், 11
பாடசாலைச் சிறார்களுடைய சீருடைக்கான வெள்ளைத் துணியை ஒரு மீற்றர் 35 ரூபா விலையில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மான்ய அடிப்படையில் வழங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

தற்போது இத்துணி வகைகள் மீற்றர் 110 ரூபாவரை விலைபோகின்றன. இதனால் பல ஏழைச் சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாமல் பாடசாலையைவிட்டு விலகி வருகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இதனைஅடுத்தே புதியதிட்டம் அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-30)

### உத்தேச நட்புறவு ஒப்பந்தம்:

## இந்தியாவின் யோசனைகளுக்கு இலங்கை தரப்பு பதில்!

புதுடில்லி, பெப். 11
உத்தேச நட்புறவு உடன்படிக்கை சம்பந்தமாக இந்தியா அனுப்பிய யோசனைகளுக்கு இலங்கை அரசின் பதில் யோசனைகள் அடங்கிய கடிதம் ஒன்றை இலங்கை வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்னா இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ராலிடம் கையளித்தார்.

இலங்கையின் யோசனைகள் குறித்த தனது கருத்துக்களை திரு. குஜ்ரால் திரு. திலகரத்னாவிடம் தெரிவித்தார்.

திரு. திலகரத்னா, கொழும்பு திரும்பியதும் அவற்றை திரு. விஜேரத்னாவிடம் சமர்ப்பிப்பார்.

குஜ்ரால் — திலகரத்னா பேச்சுக்களின் போது, இலங்கைத் தமிழ் அகதிகள் நடுக்கடலில் வைத்து தாக்கப்பட்ட விஷயமும் விவாதிக்கப்பட்டதாக, புதுடில்லியில் அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (உ-எ)

### முச்சந்தி முரளி



முதலிலை பாண், அடுத்தது பால் அதுக்குப் பிறகு எதுவோ.......? விலை ஏத்தம் என்கிறது நாளாந்தம் சாப்பிடுறது போலாச்சுதே..!

### சுபநேரம்

11 — 02 — 1990
ஞாயிற்றுக்கிழமை தை — 29
சுபநேரம்:
9 . 34 முதல் 11 . 04 வரை
ராகுகாலம்:
5 . 04 முதல் 06 . 34 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

செய்திச் சாரம்

## ஈ.பி.ஆர்.எல்.எப். பங்குபற்றும்

வருகிற 14 ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ள சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளர்களாக ஈ. பி. ஆர். எல். எப். பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

அங்கு நடைபெறும் விவாதங்களில் அவர்கள் பங்குபற்றமாட்டார்கள்.

இத்தகவலை வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் கொழும்பு ஆங்கிலப்பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (இ-எ)

## ஈரோஸும் பங்குபற்றும்

வருகிற 14ஆம் திகதி நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதாக ஈரோஸ் இயக்கம் அறிவித்திருக்கிறது.

ஈரோஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. சி. ரட்ணராஜா இது பற்றித் தகவல் வெளியிடுகையில், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்பது என்று ஈரோஸ் முடிவு செய்து உள்ளது, என்று சொன்னார். (உ-எ)

## முகாந்திரம் இராசையா காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 11
பிரபல சமூக சேவையாளரும், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் கொமாண்டருமான டாக்டர் முகாந்திரம் ஈ. பி. இராசையா நேற்றுக்காலை காலமானார். அவருக்கு வயது 96.

முகாந்திரம் இராசையா சமூக, சமயத் துறைகளில் முன்னின்று உழைத்த பெரியாராவார். (அ-க-30)

## உயர்தர பரீட்சை முடிவுகள் மார்ச்சில்

யாழ்ப்பாணம், பெப். 11
ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்பாக வெளிவரவிருக்கின்றன என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-3)

## 68 படையினர் காவலில்

கொழும்பு, பெப். 11
ஜே. வி. பியினருக்குத் தகவல் கொடுத்தனர் என்ற சந்தேகத்தில் இலங்கை ஆயுதப் படையைச் சேர்ந்த 68 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## படை வாபஸ்

யாழ்ப்பாணம், பெப் 11
மருதனாமடம், சுன்னாகம், உரும்பராய் ஆகிய பகுதிகளிலிருந்து இந்தியப் படையினர் நேற்று வாபஸாகினர்.

அதனையடுத்து இப்பகுதிகளில் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டன. (உ)

## சந்தை திறப்பு

யாழ்ப்பாணம், பெப் 11
நெல்லியடிச் சந்தை நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டது.

நெல்லியடிப் பகுதியில் நடந்த அசம்பாவிதங்களை அடுத்து, 6 மாதங்களுக்கு மேலாக அப்பகுதிப் பொதுச் சந்தை மூடப்பட்டிருந்தது.

## சென்னை திரும்பியது

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் இந்திய அமைதிப்படையின் அணி ஒன்று நேற்று சென்னைத் துறைமுகம் போய்ச் சேர்ந்தது.

படையினரை, அமைதிப் படைத் தளபதி ஜெனரல் ஏ. எஸ். கல்கத் வரவேற்றார்.

மங்களகரமான திறப்பு விழா

"லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்"

இடம் : துணைவிச் சந்தி
காலம் : 12-02-90 திங்கட்கிழமை
நேரம் : காலை 9-24 மணி

அன்பர்கள், ஆதரவாளர், வாடிக்கையாளர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

க. தாமோதரம்
க. சொக்கலிங்கம்

உதயன்-சஞ்சீவி ஏஜென்ட்,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. [2492]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

சொனி T. V. 20/60 கலர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு சுதா வைன்டிங் வேர்க்ஸ், மல்லிகா ஹோட்டல் அருகில் மானிப்பாய். (2284)

இரண்டுசோடி இனிக் கோழிகளும், உயர் இனப் புறாக்களும் விற்பனைக்கு உண்டு. மனோன், C/o மாட்டின் செல்லையா மதவடி பரிஅந்தோனியார் வீதி பண்டத்தரிப்பு. 2482

நாலு சில்லு ரெயிலர் (Trailor) விற்பனைக்கு உண்டு. அ. சிறிகாந்தன் No 38/27, மணல்தறை லேன் கந்தர்மடம் யாழ்ப்பாணம். 2474

### வீடு வளவு விற்பனை

சாவகச்சேரி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் வீடும் 6பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. அம்பாள் அரிசி ஆலை பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. 2481

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline, Golden comet, Hisex பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா, அன் பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். (2491)

Primo Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் Golden comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (2428)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

R. I. R. தனிச் சிவப்பு, கறுப்பு சேவல் பேடு (பிலிமத்) கறுப்புப்புள்ளிசேவல் (Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புறொயிலர்குஞ்சுகள்குறைந்த விலைக்கு (14.2.90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல: 9 சந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (2462)

### Toefl வகுப்புக்கள்

சனி ஞாயிறு நாட்களில் காலை 8-30. 10 மணி S B Iyar 12 வைமன் வீதி, நல்லூர். (2235)

### தேவை

சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்வதற்கு நம்பிக்கையான நற்பழக்கங்கள் உடைய, குடும்பப் பொறுப்புகள் இல்லாத ஆரோக்கியமான 60 வயதிற்கு மேற்பட்ட ஆண் உதவியாளர் தேவை. முன் அனுபவ விபரங்கள் எதிர்பார்க்கும் ஊதியம் ஆகியவற்றுடன் இரு நற்சான்றுகளுடனும் கிழமை நாட்களில் பி. ப. 4.00-7.00 மணிக்கிடையில் நேரில் வந்து சந்திக்கலாம். 21/1 விதானையார் வீதி, சுண்டிக்குளி. (2490)

அனுபவமுள்ள சவர்க்காரம் செய்யத் தெரிந்த வேலையாட்கள் தேவை. பழக விரும்புபவர்களும் நேரில் தொடர்பு கொள்ளவும். 'யூலியாஸ்' No- 14 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (2487)

ஒலிப் பதிவுத் துறையில் (Audio Recording) அனுபவமுள்ளவர்கள் உடனடியாக தேவை. நேரில் வரவும். விலாசம் ஸ்கைறோஸ் இல 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2476)

உருக்கு அலுமாரி மேசை செய்வதில் திறமையும். அனுபவமும். கொண்ட வேலை ஆட்கள் தேவை. நேரில் வரவும். பரஸ்சோ என்ஜினியறிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர். (2232)

பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகள் தைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் தையல் வேலையில் அனுபவம், கட்டிங் தெரிந்த பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். S.T.L. ரெயிலறிங் இல: 3, நவீன சந்தை மேல் மாடி, திருநெல்வேலி. 2483

### கல்வி

G.C.E (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு இரண்டு மாதத்திற்குள் சகல போசன்களும் நிறைவேற்றப்படும். மற்றும் பாலர் வகுப்பில் இருந்து A/L வரையும் சகல பாடங்களும் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் இல: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. 2456

பல்வேறு இடங்களில் குறுகிய கால ஆங்கில பயிற்சிகளை பெற்ற பின்னரும் வசனம் அமைக்கவோ வாசிக்கவோ (உச்சரிக்கவோ) முடியாதிருப்பவர்களுக்கான பயிற்சிகளை இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் அளிக்கப்படுகிறது. தொடர்பு: S. ஜெயராஜா கல்யாணி, ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் ஒட்டுமடம் யாழ்ப்பாணம். 2479

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லா இன மதத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். தொடர்பு:- மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். 2480

### மணமகள் தேவை

38 வயது இந்து வேளாளகுல சுயதொழில் பார்க்கும் ஆணுக்கு 30 வயதுக்குட்பட்ட ஓர் அளவு அழகுள்ள மணப்பெண் தேவை. மணப்பெண் வெளிநாடு செல்லவேண்டியும் வரும். ஓர் அளவு சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. பெண்ணின் படத்துடனும் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும். C/o 97, உதயன். (1963)

### மணமகன் தேவை

39 வயதுடைய5' 2'' உயரமான பொற்றொழிலாளர் குல ஆங்கில தட்டெழுத்தாளராகிய மணமகளுக்கு மணமகன் தேவை. வீடு நகை ரொக்கம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். சாதக விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 609 C/o உதயன். 2368

### TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3828)

### Spoken English

புதிய தொடர் வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 6,7-30 மணி ஆரம்பம் 12-2-90 S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (2234)

### Win Inn Ladies Academy

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம் விஞ்ஞானரீதியிலான மனையியல் வகுப்புகளும் கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகளாகிய வயலின், வீணை, கிற்றார், ஓகன் வாய்ப்பாட்டு பரதநாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் காலை 9 மணி- 12 மணி 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (2263)

### வைத்திய சேவை

அரசாங்க சேவையில் இளைப்பாறிய ஆங்கில வைத்தியர் தனித்துறை நிலையங்களில் குறைந்தது தொடர்ந்து நான்கு நாள் கடமைக்கு அழைக்கப்படலாம். மாநகர சபை எல்லை விரும்பத்தக்கது. டாக்டர் ச. முத்துக்குமாரசாமி (R.M.O.) 31/3 செட்டித்தெரு நல்லூர். (2269)

### ஆங்கில கைநூல்

Practice Makes Perfect Series 1-7 ஆங்கிலத்தில் பேசும் எழுதும் திறமைபெற உதவும். கைநூல்கள் தயாரிப்பு S B. Iyar கிடைக்குமிடம் 12 (36) வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் (2233)

### போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும். தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ள ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)


# தபாலக நிதி விவகாரங்களை கையாள 'தபால் வங்கி' நிறுவ முடிவு

கொழும்பு, பெப். 11

காசுக்கட்டளை, தபாற் கட்டளை மற்றும் பென்ஷன் முதலிய நிதித்துறை அலுவல்களை மேற்கொள்வதற்காக 'தபால் வங்கி' ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

தேசிய சேமிப்பு வங்கியின் ஒத்துழைப்புடன் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சு இத்தபால் வங்கியை நிறுவ தீர்மானித்துள்ளது.

இந்த யோசனை அரசின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இதனை அமைச்சின் செயலாளர் அசோகா குணசேகரா தெரிவித்தார்.

தபால் வங்கி நிறுவப்பட்டதும், தபால் அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் சகல நிதித்துறை நடவடிக்கைகளும், இதன் ஊடாகவே மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## வெளிவிவகார அமைச்சில் இன விகிதாசார அடிப்படையில் நியமனம்

கொழும்பு, பெப். 11

வெளிவிவகார அமைச்சில் எழுதுவினைஞர்களை நியமனம் செய்வது இனவிகிதாசார அடிப்படையில் இடம் பெறும்.

இதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன எடுத்திருக்கிறார்.

வெற்றிடங்களை நிரப்ப இனவிகிதாசாரக் கொள்கையே கடைப்பிடிக்கப்படும் என்று அமைச்சர் சகல எம். பி.க்களுக்கும் தெரியப்படுத்தி இருக்கிறார்.

கிடைத்துள்ள விண்ணப்பங்கள் இனவிகிதாசார நியமனத்துக்குப் போதுமானவையாக இல்லாதவிடத்து, அத்தகைய விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## புதியகட்டடம்

சாவகச்சேரி பெப். 11

சாவகச்சேரி நகராட்சிமன்றம், சந்தைக்கான புதிய மாடிக் கட்டடம் ஒன்றை சந்தையின் தென் பாகத்தில் அமைக்க முன்வந்துள்ளது. (இ - 3)

## ஜெனரேற்றர் பழுது

புதுக்குடியிருப்பு அரசினர் வைத்திய சாலைக்கு மின்சாரம் வழங்கி வந்த ஜெனரேற்றர் பழுதடைந்துள்ளதால் நோயாளிகள், வைத்தியசாலை ஊழியர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

## மாவிலை ஏறினாலும்....!

மாவின் விலை அடிக்கடி ஏறி இறங்கிய போதிலும் கொடிகாமத்திலுள்ளஹோட்டல்களில் பலகார வகைகளின் விலை ஏறவில்லை நிறையும் குறையவில்லை.

மக்கள் நலன் கருதி இப்படி நடைபெறுகிறதாம்

## ஆலய புனரமைப்பு

சரித்திரப் புகழ் வாய்ந்த ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தை புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நிதி ஒதுக்கீடும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (இ-126)


வட பிராந்திய போக்குவரத்துச் சபை

## கேள்விப் பத்திரம்

வட பிராந்திய போக்குவரத்துச் சபையினால் கீழ்க்காணப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கு சீல் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரத்துக்கான முடிவு திகதி 21 - 02 - 1990.

1. பாவித்த வெற்று 210 லீற்றர் ஓயில் பீபா.
2. பாவித்த ரயர்
   பாவித்த ரியூப்
   பாவித்த பிளப்ஸ் (Flaps)
3. உடைந்த வில்லுத் தகடுகள்
4. பாவித்த இருக்கைச் சட்டங்கள் (Seat Frames)
5. பாவித்த டீசல் தொட்டி (Diesel Tank)
6. பாவித்த பிறேக் றம்
7. கழிவு அலுமினியத் துண்டுகள்
8. பாவித்த பஸ்வண்டி உதிரிப் பாகங்கள்
9. பாவித்த பித்தளைக் குழாய்கள் (Brass Bushes)
10. பாவித்த றேடியேற்றர் கோர்
11. பலவிதமான கழிவுப் பொருட்கள்

கேள்விக்குரிய பொருட்களைக் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் 15 - 02 - 1990 ஆந் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் யாழ் சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். சீல் பண்ணப்பட்ட கவரில் பதிவுத் தபாலின் இடது மேல் மூலையில் ''கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிட்டு, ''தலைவர், கேள்விப் பத்திரச் சபை, வ. பி. போ. ச, பலாலி வீதி, கோண்டாவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். எக்காரணம் கொண்டும் பதிவுத் தபால் தவிர்ந்த வேறெந்த முறையிலும் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அறிவிக்கப்பட்ட திகதியில் உங்கள் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

சி. கனகரத்தினம்
தலைவர்

வட பிராந்திய போக்குவரத்துச் சபை.
கோண்டாவில்.

[சி-3369]

## 125வது தென் இந்திய யாத்திரை

(குளு, குளு ஊட்டியைக் கண்டு களியுங்கள்)

ஆரம்பம் 10-4-90 முடிவு 30-4-90 (21 நாட்கள்)

● யாத்திரை கட்டணம் — ரூபா 4900/-

இடங்கள்

திருச்சி - மதுரை - இராமேஸ்வரம் - கன்னியாகுமரி- குற்றாலம்-சுசீந்திரம் - இராஜபாளையம்-ஸ்ரீவில்லிபுத்தூர் - மைசூர் - பிருந்தாவனம் -பங்களூர் - திருப்பதி- திருவேற்காடு - மதராஸ் - மஹாவலிபுரம் - திருக்கழுக்குன்றம் - சிதம்பரம் - சீர்காழி - திருக்கடையூர்- பூம்புகார் - காரைக்கால் - நாகூர் - நாகபட்டினம்- வேளாங்கண்ணி - திருநள்ளார்-தஞ்சாவூர் -பழமுதிர்ச்சோலை - திருச்செந்தூர் - பழநி - திருத்தணி - திருப்பரங்குன்றம் - சுவாமிமலை - ஊட்டி - புட்டப்பர்த்தி முதலியன

விபரங்கட்கு:

★ விநாயகா டூர்ஸ் ★

அரசாங்கத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம் 7753

நாகம்ஸ் தியேட்டர் காம்பிளக்ஸ் சுன்னாகம்
ரத்னா மோட்டார்ஸ் 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
இராஜநாயகி தியேட்டர் காங்கேசன்துறை.

அ வி. அருணாசலம்
(முகவர்)

[2493]

## தொடர்கல்வி நிலையம்

( உடுவில் மகளிர் கல்லூரி )

பாடநெறிகள்

- ✶ சங்கீதம் - வயலின் - வீணை.
- ✶ நடனம்.
- ✶ மனையியல். [தையல் - கேக் ஐஸிங் பயிற்சிகள்[
- ✶ பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி,

' வாரத்தில் ஆறு நாட்கள் வகுப்பு '

பெண்களுக்கு விடுதிவசதி உண்டு.

ஆரம்பம்: 14-02-1990

- பணிப்பாளர்

(2286)


## திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானம்

திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தின் பெயரைச் சொல்லி சிலர் தவறான வழியில் பணம் வசூலித்து வருவதாக நாம் அறிகின்றோம். திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்தின் பெயரால் திருப்பணிக்கோ, உற்சவங்களுக்கோ, வேறு தேவைகளுக்கோ பணம் வசூலிப்பதற்கு எவருக்கும் எம்மால் அனுமதிஅளிக்கப்படவில்லை. எனவே திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்திற்கு நிதியுதவி செய்ய விரும்பும் அன்பர்கள்நேரடியாக திருக்கேதீஸ்வரம் தேவஸ்தானத்துடன்தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

திருக்கேதீஸ்வர
ஆலயத் திருப்பணிச் சபை,
திருக்கேதீஸ்வரம்.

(C/3820)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்



மலர்வு
23-01-1918

உதிர்வு
13-01-1990

அமரர் V. S. நடராசா
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்)
(P.S. 558)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவருமான திரு. நடராசா அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மற்றும் பலவகை உதவிகளைச் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் 12-02-90 அன்று கோண்டாவில் அவரது மருமகன் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடை பிரார்த்திப்போம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(2281)

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுக்கில வருடம் தைத் திங்கள் 28 ஆம் நாள் (10-2-90) சனிக்கிழமை இரவு 7. 00 மணி முதல் 9. 00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில்

திருநிறை செல்வன்
**மகேசன்**
Erindale Campus, University of Toronto Canada
(முன்னாள் உதவி விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**நந்தினி**
அவர்களுக்கும்

கனடா, ரொரன்ரோ இலக்கம் 201, MONARCH PARK AVENUE இல் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யத் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி காசிப்பிள்ளை
பத்தாம் கட்டை, ஆவரங்கால்
புத்தூர், இலங்கை

திருமதி. புஸ்பவதி கந்தசாமி
100, Mornelle Court Apt, & 1042
Scarborough, Ontario
MIE 4×2 CANADA

(2473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இரக்க இரத்தார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று.

**பொருள்:**

இரந்து கேட்கத் தக்கவரைக் கண்டால் அவரிடம் இரக்க வேண்டும்; அவர் இல்லை என்று ஒளிப்பாரானால் அது அவர்க்குப் பழி; தமக்குப் பழி அன்று.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
11- 02- 1990 த. பெ. இலக்கம்: 23

# அவர்கள் உணர வேண்டியது

வடக்கு - கிழக்கில் அரசாங்கம் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். அதனைச் செய்வதற்கு தெற்கில் செய்தது போல ஆயுதப் படைகளைப் பயன்படுத்த வேண்டும். வடக்கு - கிழக்கிற்கு படைகளை அனுப்பி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்திருக்கிறார் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. பி. ரத்நாயக்கா.

திரு. ரத்னாயக்கா ஒரு சிரேஷ்ட அரசியல்வாதி. தமது கட்சியின் சார்பில் அமைச்சராக இருந்தபோது தமிழர் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவராகக் காட்டிக் கொண்டவர். யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்றவர் என்பதால், தமிழர்களுடன் நெருக்கமானவர் எனக் காட்ட முயன்றவர். சில வேளைகளில் தமிழர்களின் பிரச்சினை பற்றிச் சிறிது நியாயமான கருத்துக்களையும் வெளியிட்டு வந்தவர்.

ஆனால் அவர் தாமும், சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளும் அசல் அரசியல்வாதி என்பதை. பச்சோந்திப் போக்குடையவர் என்பதை இப்போது வெளிப்படுத்தி இருக்கிறார். சுதந்திரக் கட்சிக்கு தமிழ்ப் பகுதிகளில் இனிமேல் வாக்குச் சேராது; அப்படி வாக்குச் சேர்க்கும் தேவை ஏற்படாது என்ற எண்ணத்தில் அவர் இவ்வாறு பேசியிருக்கிறார் என நினைக்கலாம்.

இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கு எல்லாம் மூல காரணமானது தமிழர் பிரச்சினை. அதனைத் தீர்க்காமல் நாட்டை எந்த விதத்திலும் முன்னேற்ற முடியாது. தமிழர்களின் பிறப்புரிமைகளை மறுத்து, அவர்களை அடக்கி ஆள நினைத்துச் செயற்பட்டதால் தான், நாடு இப்போது எல்லாத்துறைகளிலும் சீரழிகிறது.

தமிழ்ப் பகுதிகளை ஆளும் - நிர்வகிக்கும் - அபிவிருத்தி செய்யும் - அங்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் - பணிகள் எல்லாவற்றையும் தமிழர்களிடமே ஒப்படைத்துவிட வேண்டும். அவை யாவும் தமிழர்களுக்குச் சேரவேண்டிய பொறுப்புகள்; பிறப்பு உரிமைகள்.

இந்த உரிமைகளுடனும், பொறுப்புகளுடனும் சிங்களத் தலைவர்கள் நோண்டக் கூடாது; தமிழர்களை இன்னற்படுத்திச் சீண்டிவிடக் கூடாது; தாமே அவற்றைச் செய்யும் பொறுப்பை தம்பாட்டில் தமது கைக்குள் எடுத்து மேலோங்க நினைக்கவும் கூடாது.

அப்போது தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழி ஏற்படும். அதை விடுத்து, சிங்கள இராணுவத்தையும், பொலீசையும் வடக்கு - கிழக்கிற்கு அனுப்பிப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாண முயன்ற திரு. ஜெயவர்த்தனாவும், அவரது சகா திரு. லலித் அத்துலத்முதலியும் தோல்வி கண்டதை, திரு. ரத்னாயக்கா மறந்தது ஏனோ? அந்த முயற்சி வேண்டாத வினைகளை விளைவித்திருப்பதை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்து போனது தான் ஏனோ? எதிர்க்கட்சியில் உள்ளதாலா?

திரு. ரத்னாயக்கா என்ன, தென்னிலங்கை அரசியல்வாதி எவருமே, இராணுவ நடவடிக்கை மூலம் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை அடக்கலாம் என இனியும் நினைத்தால், அல்லது கணக்குப்போட முயன்றால், அதைவிட மகா தவறு எதுவும் இருக்கமுடியாது. இந்த நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் சாபக்கேட்டையும், அழிவையும் நீக்கமுடியாது. இதனை அரியணையில் உள்ள அரசும் சரி, அதனை அடைய நினைக்கும் எதிர்க்கட்சியும் சரி நினைவில் பதித்துக் கொள்வது அவசியம்.

ஆயுதப்படைகளின் உதவி கொண்டு வடக்கு-கிழக்கில் சட்டத்தை நிலைநாட்டவோ அல்லது அமைதியை உருவாக்கவோ எண்ணுவதைவிட, பேச்சுவார்த்தை, கருத்து ஒற்றுமை, விட்டுக் கொடுத்தல் புரிந்துணர்வு என்ற வழியையே நாட வேண்டும்.

தமது உரிமைகள் கிடைக்கும்வரை தமிழர்கள் தமது போராட்டத்தைக் கைவிடமாட்டார்கள். இது நிச்சயம். அவர்களது போராட்ட உணர்வு மழுங்கிப்போய் விடும் எனவும் கனவு காணக்கூடாது. இன்றைய, வருங்கால தமிழ் இளைஞர் இதயங்களில் இருந்து அந்த உணர்வை அழித்து விடுவது இயலாத ஒன்று.

எனவே வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி, இலங்கை முழுவதிலுமே சட்டத்தை நிலைநாட்டவும், அமைதியை உருவாக்கவும் தமிழர்களின் உரிமைகள், பூரணமாக, விட்ட குறை தொட்ட குறை வைக்காமல் வழங்கப்பட வேண்டும். அதற்கு நல்லுறவு, நல்லெண்ணம் ஆகிய நல்வழிகளை நாடவேண்டும். அவையே நிரந்தர அமைதிக்கும் சமாதானத்துக்கும் இட்டுச் செல்லும் எனத் தென்னிலங்கைத் தலைவர்கள் உணரட்டும்.

கடலில் சுடப்பட்ட சம்பவம்:

# சர்வ கட்சிக் கூட்டத்துக்கு கருணாநிதியிடம் கோரிக்கை

தமிழகம் வருகையில், இலங்கைத் தமிழ் அகதிகள் சிலர் கடற்பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமையைப் பரிசீலிக்க அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று இலங்கைத் தமிழருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது இந்திய அரசின் தார்மீகக் கடமை என்று திரு. இராமமூர்த்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஓ-எ)

# யாழ். விவசாய அபிவிருத்திக்கு ரூபா. 25 லட்சம்

## 3 வெளிநாட்டு அமைப்புக்கள் உதவி

யாழ்ப்பாணம், பெப். 11 யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 25 இலட்சம் ரூபாவை மூன்று வெளிநாட்டு அமைப்புக்கள் வழங்கியுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கி, யு.என்.எச்.சி.ஆர், யு.எஸ். எயிட், ஆகிய மூன்று அமைப்புக்களுமே இத்தொகையை வழங்கியுள்ளன.

பழுதடைந்த குளங்கள், விவசாய வீதிகள், சேதம் அடைந்த கமநலசேவை நிலையங்கள் ஆகியன இந் நிதியில் இருந்து திருத்தப்பட இருக்கின்றன. (இ-3)

சுவீடிஸ் - யாழ். பல்கலைக்கழகங்கள்

## ஆய்வுகளை மேற்கொள்ள இணைந்து செயற்பட ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 11 இந்துசமயம், சரித்திரம், தமிழ், இலக்கியம் ஆகிய துறைகளில் ஆய்வுகள் மேற்கொள்ள சுவிடிஸ் பல்கலைக்கழகம் ஒன்று யாழ் பல்கலைக் கழகத்துடன் இணைப்புச் சேவையை ஏற்படுத்தியுள்ளது.

சுவீடன் உப்புசாலா பல்கலைக்கழகத்துக்கும், யாழ் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் நடைபெற்றுவந்த பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த இணைப்புச்சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி இங்கிருந்து அறிஞர் குழு ஒன்று அடுத்த மாதம் சுவீடன் செல்லவிருக்கிறது.

அங்கிருந்தும் அறிஞர்குழு இங்கு விஜயம் மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டது. (இ-3)

தமிழ்க் குழுக்களிடையிலான

## சண்டையை நிறுத்துமாறு தி. மு. க. கோரிக்கை

திருச்சி, பெப் 11 தி. மு. க. மாநில மாநாடு வெள்ளியன்று திருச்சியில் ஆரம்பமானது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தி. மு. க பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானங்களை முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

தீர்மானங்கள் வருமாறு;

- தமிழீழப் போராளிகளுக்கு இடையே நடைபெறும் சகோதர யுத்தத்தை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று அனைத்துத் தமிழ்ப் போராளிக் குழுக்களையும் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
- இலங்கைத் தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழக முதல்வர் கருணாநிதியின் உதவியோடு இந்திய அரசு எடுத்துவரும் முயற்சிகள் வெற்றிபெறும் என்று பொதுக்குழு நம்புகிறது.

# கிளிநொச்சியில் ரூ. 1 1/2 கோடி செலவில் விவசாய பீடம்

யாழ்ப்பாணம் பெப் 11 கிளிநொச்சியில் 1 கோடி 50 லட்சம் ரூபா செலவில் விவசாயப்பீடம் அமைக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் அமைக்க பல காலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தபோதும் தற்சமயம்தான் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

15 மாதங்களில் வேலைகளை முடிக்கவேண்டும் என்று ஒப்பந்தக்காரருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஊர்திரும்பும் இளைஞர்கள்

குருநகர் பெப். 11 வடக்கில் இருந்து கடந்த சில மாதங்களாக வெளியேறிப் பிற மகாணங்களில் தங்கி இருந்த இளைஞர்கள் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். (க - 51)

# கல்வித்திணைக்கள ஊழியருக்கு கஷ்ட நிவாரணம் இல்லையாம்

யாழ்மாவட்ட அரசாங்க ஊழியர்களுக்குவழங்கப்பட்ட கஷ்டநிவாரணப்படி கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்று புகார் கூறப்படுகிறது.

யாழ்மாவட்டம் கடந்த வருடத்தில் கஷ்டப்பிரதேசமாககணிக்கப்பட்டு அரசாங்க ஊழியர்களுக்கு நிவரணப்படியாகஆறுமாதச் அரைமாதச் சம்பளத்தை வழங்க அரசு உத்தரவிட்டிருந்தது.

இதன் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில்உள்ளதிணைக்கள ஊழியர்களுக்கு இந்த நிவாரணப்படி வழங்கப்பட்ட போதும் இதுவரை கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு அது வழங்கப்படவில்லை. (இ-3)

## நினைவில் இன்று

11- 02- 1990

மலையகக் காந்தி கே. ராஜலிங்கம்நினைவு தினம்

வவுனியா முன்னாள் எம். பி. சி. சுந்தரலிங்கம் நினைவு தினம்.

## வடமராட்சி கல்வி அதிகாரி அறிவிப்பு

பருத்தித்துறை பெப். 11 வடமராட்சிக் கோட்டக் கல்விப்பிரிவில் வசதிக்கட்டண பாடசாலை அபிவிருத்திச் சபை நிதி போன்றவற்றில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களின் பெயர்ப் பட்டியல்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறும் பட்டதாரிச் சம்பளத்தில் அமர்த்தப்படாத பட்டதாரி ஆசிரியர்களின் விவரத்தினையும் 11 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும் 01 – 01 – 84 முதல் 04 – 01 – 88 வரை உள்ள காலப்பகுதியில் சேவையிலிருந்தபடியே அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவர்களை மட்டுமே இப் பட்டியலில் குறிப்பிடுமாறும் வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் அறிவித்துள்ளார். (க – 118)

பேராதனைப் பல்கலைக்கழக

## வைத்திய மாணவருக்கு கிளினிக்கல் வகுப்புக்கள்

கொழும்பு, பெப் 11 பேராதனைப்பல்கலைக் கழக இறுதியாண்டு வைத்திய மாணவர்களுக்கான கிளினிக்கல் வகுப்புக்கள் இம்மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இதனால் மாணவர்களை இம்மாதம் 12 ஆம் திகதி வைத்தியபீட பீடாதிபதி அலுவலகத்துக்கு வரும்படி உபவேந்தர் கேட்டிருக்கிறார்.

மாணவர்கள் தங்கும் வசதிகளை பல்கலைக்கழகத்துக்கு வெளியே இறுதி ஆண்டு மாணவர்கள் அமைப்புக்குழு செய்து கொடுக்கும்.

இப்படி உபவேந்தர் தெரிவித்தார். (இ-எ)

## அதிபர் பதவி வெற்றிடங்கள்

பருத்தித்துறை பெப் 11 வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவில் எட்டுப் பாடசாலைகளுக்கு அதிபர் வெற்றிடங்கள் உள்ளன.

அதிபர் தரமுடைய ஒருவரினால் அப்பதவிகள் நிரப்பப்படும்வரை உதவி ஆசிரியர் ஒருவரை அதிபரின் கடமைகளைப் புரிவதற்காக தெரிவு செய்வதற்கு நேர்முகப்பரீட்சை நடைபெற உள்ளது.

இப்பதவி வெற்றிடங்களுக்கு வடமராட்சிக் கோட்டப் பாடசாலைகளில்கடமை புரியும் உதவி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

பதவி வெற்றிடமுள்ளபாடசாலைகளின் விவரம்:

தாளையடி றோ.க. த. க பாடசாலை, திரு இருதயக் கல்லூரி, மணியகாரன்தோட்டம் இ. த. க. பாடசாலை, உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாசாலை, பொலிகண்டி இ. த. க பாடசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாலையம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் கோட்டக்கல்வி பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (க-118)

## யாழ். தபாலகத்துக்கு கொங்கிறீட் தபாற் பெட்டி

யாழ்ப்பாணம் பெப் 11 யாழ். பிரதம தபாலகத்துக்கு கொங்கிறீட்டினால் செய்யப்பட்ட 15 புதிய தபால் பெட்டிகள் அண்மையில் வந்து சேர்ந்தன. மேலும் பலகையிலான தபால் பெட்டிகளும் வந்து சேர உள்ளன.

கடந்த கால அசம்பாவிதங்களினால் யாழ்–மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சகல தபால் பெட்டிகளும் சேதமாகியிருந்தன. இதனால் பொதுமக்கள் கடிதங்களை அஞ்சல் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

தபால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அடுத்து பல தபால் பெட்டிகள் திருத்தியமைக்கப்பட்டன. திருத்த முடியாத நிலையில் பல பெட்டிகள் கைவிடப்பட்டன.

இவ்வாறான இடங்களில் அடுத்த சில வாரங்களில் புதிய பெட்டிகள் நிறுவப்பட உள்ளன.

அத்துடன் பல புதியதபால் பெட்டிகள் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன (இ-9)

## வட பிராந்திய போ. சபைக்கு மகஜர்

பருத்தித்துறை, பெப். 11 கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் தமது வகுப்புகள் முடிந்து உரிய நேரத்துக்கு வீடுகளுக்குச் செல்ல வசதியாகபஸ் ஒழுங்கு செய்து தருமாறு பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்துச்சபை சாலை அத்தியட்சகரை மகஜர்மூலம் வேண்டியுள்ளனர்.

இருபாலைச் சந்தியிலிருந்து இல 150,151 பஸ்களை பருத்தித்துறைக்கு சேவையாற்ற ஒழுங்கு செய்து தருமாறு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலை 7 மணிக்கு பருத்தித்துறையிலிருந்துஇருபாலைக்கு ஒருபஸ்சேவையையும் மாலை 4மணிக்குஇருபாலையிலிருந்து பருத்தித்துறைக்கு ஒரு பஸ் சேவையையும் ஒழுங்கு செய்து தருமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-118)

வவுனியா

## தேர்தல் அலுவலகம் மீண்டும் இயங்குகிறது

வவுனியா, பெப் 11 பத்துமாதங்களுக்கு மேலாக மூடப்பட்டு கிடந்த வவுனியா தேர்தல் அலுவலகம் தற்போது இயங்கத் தொடங்கியுள்ளது.

கடவுச் சீட்டுக்கள் பெறுவதற்கும் வேலைவாய்ப்புகளுக்கான விண்ணப்பத் தேவைகளுக்கும் வாக்காளர் பட்டியல் சான்றிதழ்களைப் பெறுவதில் பலரும் அனுபவித்து வந்த கஷ்டங்கள் இதன் மூலம் தீர்ந்துஉள்ளன.

அத்துடன் வாக்காளர் பட்டியல்களைப் புதுப்பித்தல் நிரல்படுத்தல் போன்ற வேலைகள் தற்போது துரித கெதியில் நடைபெற்று வருகின்றன. (இ-164)

## மூதாட்டி மரணம்

பண்டத்தரிப்பு பெப். 11 கடந்தஜனவரி 5 ஆம் திகதி வடலியடைப்பு, பண்டத்தரிப்பு சில்லாலைப்பகுதியில் இடம்பெற்ற ஷெல்லடியில் காயமடைந்த 76 வயது மூதாட்டி இறந்தார் ... (இ – 120)

சமய சந்நிதியில்

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் பெப். 11 நவற்கிரி பூவடி வைரவர் ஆலயம் பல்லாயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து 48 நாட்களுக்கு விசேட உற்சவம் நடைபெற்று வருகிறது. (இ – 3)

யாழ். மாநகர சபை உட்பட்ட பகுதியில்

## 43 லட்சம் ரூபா செலவில் வீதிகள் செப்பனிடப்படும்

யாழ்ப்பாணம், பெப். 11 யாழ். மாநகர சபைக்குட்பட்ட பத்து வீதிகள் 43 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாண நகரில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் செப்பனிடப்பட இருப்பதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாண்டு வரவு- செலவுத் திட்டத்தில் இந்த வீதிகளைத் திருத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படஇருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## குறைந்த வட்டியில் கடன்

பண்டத்தரிப்பு, பெப். 11 யாழ்மாவட்ட சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் குறைந்த வட்டியில் கடன் வழங்கத்தீர்மானித்துள்ளது.

சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நிதிக்கஷ்டம் காரணமாக, பொது மக்களுக்கு அத்தியவசியப் பொருட்களை வாங்கி, விநியோகிக்க முடியாத நிலையிலுள்ளன.

அந்த அவலத்தை போக்கி நுகர்வோரின் தேவையை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பூர்த்தி செய்யவே கடன் வழங்கு திட்டம் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-120)

## டானியல் நூல் வெளியீடு

குருநகர் பெப். 11 அமரர் கே. டானியலின் ''குறுநாவல்கள்'' நூல்வெளியீட்டு விழா யாழ்-பல்கலைக் கழகத் தமிழ் மன்ற ஆதரவுடன் நாளை 12-ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு பல்கலைக் கழக அரும்பொருளக அறையில் நடைபெறும்.

தமிழ் மன்றத் தலைவர் திரு. பிறிம்ராஜ் ரவிச்சந்திரா தலைமையில் நடைபெறும் வைபவத்தில் விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராசா, எம். ஏ. வரவேற்புரை செய்வார்.

முதற்பிரதியை பிரபல எழுத்தாளர் 'சொக்கன்' பெறுவார்.

திரு. வி. பி. சிவநாதன், எம். ஏ. கலாநிதி சி. மௌனகுரு, ஜனாப் ஏ. சி. எம் இக்பால் ஆகியோர் ஆய்வுரைகளையும் நிகழ்த்துவர். (க – 51)

## கோதுமைமா தட்டுப் பாடு

சாவகச்சேரி, பெப் 11 சாவகச்சேரியில் கோதுமை மாவிற்கு பெருந் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் பேக்கரிகளில் பாண் போடப்படுவது குறைந்து பாண் பெறமுடியாதிருப்பதுடன்கடைகளில்பலகார வகைகளும் மிக்க குறைவாக வே காணப்படுகின்றன. (க-31)

# யாழ். பல்கலைக்கழக நிதியத்துக்கு 1000 பவுண்

## அமெரிக்க தமிழ் மாணவர் உதவி


யாழ்ப்பாணம் பெப். 11 அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் யாழ்ப்பாண மாணவர்கள் இணைந்து யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் நிதியத்துக்கு 1000 பவுண் அனுப்பியுள்ளனர்.

''அமெரிக்கப் பல்கலைக் கழகங்களின்யாழ்ப்பாண நண்பர்கள் லீக்'' என்ற அமைப்பில் இணைந்து மேற்படி உதவியை அவர்கள் வழங்கி யுள்ளார்கள்.

இதுபோன்று மற்றைய நாடுகளில் உள்ள யாழ்ப்பாண மாணவர்களும் பல்கலைக்கழக வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்று உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ – 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


...க்கை நாணயத்தின் சின்னம்-ஷப்ரா



## கூர்ந்து கவனியுங்கள்!

## ஷப்றா தரும் வட்டி வீதங்களை

கூர்ந்து கவனியுங்கள்!!




**பணிப்பாளர் சபை**

திரு. எஸ். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A- I- B- (Loud) முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்
A- I. B. (Lond) பொதுமுகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
B A. (Hons)

திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,817,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,365 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1 791.516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி | | | |
| " செலுத்து முன் லாபம் | 6,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,206 | 1,372.825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

★ முதலீட்டுப் பாதுகாப்பு ★ திறமையான சேவை ★ சிறந்த வருமானம்

## நிதித்துறையில் உங்கள் நண்பன்

# ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

61, நியு புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி இல: 589310 & 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# SHABRA


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலைவாய்ப்பு

## KUWAIT

[ பிரபல போக்குவரத்துக் கம்பனியில் வேலைவாய்ப்பு ]

| | | | |
|---|---|---|---|
| 1. | கனரக சாரதிகள் | 60 பேர் | 70 டினார் |
| 2. | சாதாரண வாகன சாரதிகள் | 40 பேர் | 55 டினார் |
| 3. | ரயர் பிற்றர் | 03 பேர் | 50 டினார் |
| 4. | பெண் செக்ரட்டறி | 01 ஆள் | 90 டினார் |
| 5. | டீசல் மெக்கானிக் | 05 பேர் | 90 டினார் |
| 6. | பெண் கிளீனேர்ஸ் | 50 பேர் | 30 டினார் |

ஒன்றரை மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம். கடவுச்சீட்டு 3 பாஸ்போட் சைஸ் படம், அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

மற்றும் குவைத் நாட்டிற்கு பணிப்பெண்களாக செல்வோருக்கு இரு வாரத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

வயது எல்லை ஆண்கள் 20—47 வரை
பெண்கள் 30—45 வரை

## SAUDI ARABIA

| | | |
|---|---|---|
| 1. | Cleaner | 400 SR |
| 2. | Plumber | 550 SR |
| 3. | Electrician | 550 SR |
| 4. | Carpenter | 550 SR |
| 5. | Civil Engineer | 1200 SR |
| 6. | Electric Engineer | 1700 SR |
| 7. | Telephone Technician | 1000 SR |
| 8. | Painter | 550 SR |
| 9. | Waiter | 375 SR |

கடவுச்சீட்டு, 3 படம் அனுபவச் சான்றிதழ் என்பவற்றுடன் எமது காரியாலயத்தோடு நேரில் தொடர்பு கொள்ளவும்.

வயது எல்லை 21 — 47 வரை

# TV Travels & Tourist

**Front of Railway Station,**
**Brown Road,**
**KOKUVIL.**

(3824)

யாழ். மாவட்ட பாடசாலை

# பதில் அதிபர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், பெப். 11 யாழ்மாவட்டப் பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமை புரிந்துவரும் பலர் நிரந்தர அதிபர்களாக நியமிக்கப்பட இருப்பதாக அறிய வந்தது.

யாழ். மாவட்டத்தில் 31-12-89 ஆம் திகதிக்கு முன் மூன்று வருடத்துக்குக் குறையாமல் பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களை நிரந்தரமாக்க மாகாணசபை கல்விச் செயலாளர் யாழ். கல்வித் திணைக்களத்திடம் விவரங்களைக் கோரியிருந்தார்.

இதற்கமைய பதில் அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் பதிந்து விண்ணப்பப்பத்திரத்தைப் பெற்றுச் செல்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் அரை வாசிக்கு மேற்பட்ட பாடசாலைகளில் பதில் அதிபர்களே அதிபர்கள் கடமையைச் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-3)

சிங்கப்பூர், மலேசிய ஓய்வூதியக்காரர்

# முகவரியை பதிவு செய்தால் வவுச்சர் வீட்டுக்கு வரும்

யாழ்ப்பாணம், பெப் 11 சிங்கப்பூர், மலேசிய ஓய்வூதியம் பெறுபவர்கள் தம் முகவரியை யாழ். அரசாங்க செயலகத்தில் பதிவு செய்தால் ஓய்வூதிய வவுச்சர் நேரடியாக வீட்டுக்கு அனுப்பப்படும்.

யாழ். அரசாங்க செயலக ஓய்வூதியக் கிளையினர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளனர். தற்சமயம் அவர்களின் வவுச்சர்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கே அவர்கள் சென்று எடுக்கிறார்கள்.

எம்மிடம் அவர்கள் முகவரி இருந்தால் நாம் வவுச்சர்களை நேரடியாக வீட்டுக்கு அனுப்புவோம். அவர்கள் கையொப்பம் இட்டு வேறு ஒருவர் மூலமாக வங்கியில் மாற்றிப் பணம் பெறலாம். வயது முதிர்ந்த நேரத்தில் அவர்கள் வங்கி செல்லும் நிலையை தவிர்க்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சிவத் தமிழ் செல்விக்கு பாராட்டுவிழா

யாழ்ப்பாணம் பெப். 11 சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 65 வயதுப் பூர்த்தியை முன்னிட்டு பாராட்டு விழா ஒன்றும் தேநீர் விருந்தும் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார்.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம், கவிஞர் சோ. பத்மநாதன் புலவர் ஈழத்துச் சிவானந்தன் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள். (க)

## கொள்ளைகள்

கொழும்பு, பெப். 11 கடந்த சில தினங்களில் கிழக்கில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் சில வருமாறு;

★ கடந்த திங்கள் இரவு பத்து மணியளவில் அம்பாறை மாவட்டம் தீத்தை ஆறு இலுக்குச்சேனை என்ற இடத்தில் சிறிய இரண்டு கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

★ அம்பாறை மாவட்டம் ஆலும் வட்டை என்ற இடத்தில் 9 பேர் கொண்ட குழு ஒன்று ஒரு வீட்டினுள் புகுந்து கொள்ளையடித்தது. வீட்டில் இருந்த முகம்மது ஹனிபா என்பவர் கொள்ளையர்களினால் தலையில் சுடப்பட்டு உயிரிழந்தார்.

★ வட்டமடு என்ற இடத்தில் வாடி ஒன்றில் இருந்து 'ஷொட் கண்' ஒன்று கொள்ளையடிக்கப்பட்டது. வாடி உரிமையாளரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அலுவலகப் பிரதிநிதி ஒருவர் இத்தகவல்களைத் தெரிவித்தார். (உ)

## நிரந்தர வீடமைப்புத் திட்டம்

இயற்கை அனர்த்தங்களால் வீடிழப்போருக்கு என்று நிரந்தர வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது என அரசு முடிவு செய்திருக்கிறது.

ஏற்கனவே இடம் பெற்ற இயற்கை அனர்த்தங்களால் வீடுகளை இழந்தோரும் இத்திட்டத்தின் கீழ் வீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம். (இ)

# தேவை

1) மலேசியாவில் குறுகிய காலம் வேலை செய்ய அனுபவம் உள்ள பணிப்பெண்கள் தேவை. சர்வதேச கடவுச் சீட்டு உள்ளவர்கள் மட்டும் நற்சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும். மாதம் ரூபா 2500/- க்கு மேல் சம்பளமும் போக வர விமானச் சீட்டும் கொடுக்கப்படும்.

11) சிங்கப்பூரில் குறைந்தது 2 வருடம் பணிபுரிய அனுபவம் உள்ள பணிப் பெண்கள் தேவை. ஆங்கில அறிவும், மின்சார உபகரணங்கள் பாவிக்கக் கூடியவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. மாதம் ரூபா 3000/- க்கு மேல் சம்பளம் கொடுக்கப்படும். 2 வருடங்களுக்கு மேல் பெறுமதியான சர்வதேச கடவுச் சீட்டு உள்ளவர்கள் மட்டும் நற்சான்றுகளுடன் விண்ணப்பிக்கவும்.

**22/1, விதானையார் வீதி,**
**சுண்டிக்குளி.**

[2465]

# அவள் சிங்கர் தனிக்கதவுக் குளிரூட்டி ஒன்றை வாங்கியது ஏன்?

சிங்கர் தனிக் கதவுக் குளிரூட்டி தோற்றத்தில் எழிலானது பல வர்ணங்களில் கிடைக்கிறது.... அமைப்புகளும் பல விதம்......இல்லத்திற்கும் பொலிவாக இருக்கம்.....என்றெல்லாம் நான் எடுத்துக் கூறியது உண்மைத்தான்.
ஆனல், அவள் அதற்காக வாங்கவில்லை.
சிங்கர் தனிக்கதவுக் குளிரூட்டியின் ஏராளமான நன்மைகளை அவள் என்னைவிட நன்றாக அறிந்திருந்தாள்.



* நீடித்த உழைப்பு
* கொம்பிறசருக்கு 5 வருட கால உத்தரவாதம்
* தொல்லையற்ற செயற்பாடு
* துருப்பிடிக்காது
* தட்டுகளை இலகுவில் கழற்றிச் சுத்தம் செய்யலாம்
* உணவுகளை பாதுகாத்து வைக்கப் போதிய இடவசதி
* தட்டுகள் ஒவ்வொன்றும் எதற்கென எழுதப்பட்டுள்ளது.
*றெக்ஸின் பட்டி ஒட்டப் பட்ட கதவு விளிம்பு

பி.எல.எஸ். 7
ரூ. 15,490/-

இப்படி ஒவ்வொன்றாக அவள் அடுக்கிக்கொண்டே போனாள் ஆம் அவள் கூறிய அத்தனையும் உண்மை. அன்றாட வீட்டு வேலைகளை இலகுவாக்கி வாழ்வுக்கு வசதியும் இல்லத்திற்குப் பொலிவும் அளிக்க வல்ல சிங்கர் தனிக்கதவுக் குளிரூட்டி ஒன்றை நீங்களும் வாங்குங்கள்.

உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் தொழில்நுட்பத்தின் படைப்பு

இலகு கொடுப்பனவு முறையிலும் கொள்வனவு செய்யலாம்

**சிங்கர்***
மாற்று மையம்

சிங்கரின் பராமரிப்புச் சேவை நம்பிக்கையானது. உன்னதமானது. நீவடங்கலானது

# 1 ஆம் ஆண்டு நினைவு தினம்



## அமரர் செல்லப்பா ஆறுமுகம்

(சட்டத்தரணி)

தோற்றம்: 26 — 10 — 1910
மறைவு: 11 — 02 — 1989

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், மச்சாள்மார், மச்சான்.**
**பெறாமக்கள், மருமகள்,**
**பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.**

நந்தாவில், கொக்குவில். (2278)

உங்கள் தேவைகளை காலை 6.00 மணி முதல்
இரவு 9. 00 மணி வரை பெற்றுக்கொள்ள
தபால் சேவையினை வழங்கிவரும் கண்ணியம் மிக்க முன்னோடிகளான

# ஹிலானி ஏஜென்சி தபாற்கந்தோர்
# GILANI AGENCY POST OFFICE

யாழ். மக்களுக்கோர் அரிய சேவையான தொலைத்தொடர்பு சேவையை ஆரம்பித்துள்ளார்கள்.

யாழ். நகரில் இருந்துகொண்டு உலகின் எந்த நாட்டிலும் வதியும் உங்கள் உறவினர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள 6 மணித்தியால சர்வதேச CABLE சேவையை தபாற்கந்தோர் கட்டணத்தில் எமது தபாற்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

✶ உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசிச் சேவை
✶ Telex சேவை (Cable)
✶ Fax சேவை

இவை அனைத்துக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

# GILANI AGENCY POST OFFICE

**19, Clock Tower Road, Jaffna.** (ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)

**இரவு - பகல் சேவை** (2485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்புநோக்குநர் தேவை

ஒப்பு நோக்குதலில் அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- செய்திப் பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- முன் அனுபவம், திறமைக்கு ஏற்ப வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கல்வித் தகமை, தொழில் அனுபவம், நற்சான்று அத்தாட்சிப் பத்திரங்களுடன் பின்வரும் முகவரிக்கு 22-2-90க்கு முன்னர் விண்ணபிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி)

**நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## மாவிட்டபுரத்திலிருந்து சிமெந்து ஆலைவரையிலான ரயில் பாதை திருத்தப்படும்

யாழ்ப்பாணம், பெப். 11

மாவிட்டபுரத்திலிருந்து-காங்கேசன்துறை சிமெந்து ஆலைவரையுள்ள ரயில் பாதை திருத்தி அமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 7 வருடங்களுக்கு மேலாக இந்த ரயில் பாதை கைவிடப்பட்ட நிலையிலிருந்தது.

இதனல் சிமெந்துக் கூட்டுத்தாபனம் மூலப்பொருள்களையும், உற்பத்திப் பொருள்களையும் காங்கேசன் ரயில் நிலையம்வரை லொறிகள் மூலம் எடுத்துச் சென்று விநியோகித்துவந்தது.

சிமெந்தின் உற்பத்திச்செலவும் இதனால் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த ரயில் பாதையை திருத்த சிமெந்துக் கூட்டுத்தாபனத்திடம். ரயில்வே திணைக்களம் 1 கோடி 20லட்சம் ரூபாவை கேட்டிருந்தது.

முதல்கட்டமாக 40 லட்சம் ரூபா இந்த ரயில் பாதையைத் திருத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வேலைகள் ஆரம்பமாக உள்ளன. (இ-9)

## சைவசித்தாந்த பிரிவை ஆரம்பிக்க உதவுக

### உபவேந்தர் கோரிக்கை

'யாழ். பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த பிரிவை ஆரம்பிக்க நிதி போதாமல் உள்ளது. சைவமக்கள் நிதி வழங்கி இப்பிரிவை ஆரம்பிக்க உதவவேண்டும்'

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த பிரிவை ஆரம்பிக்க 83 ஆம் ஆண்டு பரந்தனைச் சேர்ந்த வல்லிபுரம் நடராசா என்பவர் மூன்று இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தார்.

அதைத் தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தானம், இந்து கலாசார அமைச்சு, பரமேஸ்வரா நம்பிக்கை நிதியம் ஆகியன அளித்த உதவிகளுடன் இத்தொகை 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக உயர்ந்தது.

இப்பிரிவை ஆரம்பிக்க 15 இலட்சம் ரூபா தேவையாக உள்ளது. ஆகவே சைவ மக்களும், சைவ மன்றங்களும் நிதி உதவி வழங்கி இப்பிரிவை ஆரம்பிக்க உதவவேண்டும்.

இப்படி அவர் கோரியுள்ளார்.

## ஜனாதிபதி அலுவலகத்துக்கு அறிவித்தே இந்தியா சென்றேன் - முதலமைச்சர் தகவல்

திருகோணமலை பெப். 11

ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்துவிட்டே நான் இந்தியா புறப்பட்டேன். ஆகவே இப்போது வெளியுறவுஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின எனது இந்தியப் பயணம் குறுத்து கருத்து வெளியிடும் முறை அவரது அறியாமையையே காட்டுகிறது.

இப்படிக் கூறினார் வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள்.

திருகோணமலையில் வைத்து உதயன் செய்தியாளருக்கு அவர் நேற்றுப் பேட்டியளித்தார்.

அவர் நேற்றைய பேட்டியில் மேலும் கூறியதாவது:-

ஈழத்தமிழர் பிர்ச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில், திரு. ரஞ்சன் விஜேரத்தின இவ்வாறு பொறுப்பற்ற முறையில் செயற்படுகிறார்.

மாகாண முதலமைச்சரின் பாதுகாப்பு பற்றி அவர் பேசுகிறார். இந்த நாட்டில் ஜனாதிபதி முதல் மாகாண சபையின் முதலமைச்சர் வரை-சாதாரண குடிமகன் வரை ஒவ்வொருவரின் பாதுகாப்பிற்கும் பாதுகாப்பு அமைச்சர்தான் பொறுப்பு.

ஆனால் ஒரு மாகாண முதலமைச்சர் பாதுகாப்பு இல்லை என்று அவர் கிண்டலாகப் பேசுவது அவர் தன்னைத் தானே கிண்டல் செய்கிறார் என்பதையே காட்டுகிறது. அவர் இதனை உணரவேண்டும்.

நான் இந்தியாவுக்குச் செல்வதை தற்போது எந்தச் சட்டமும் கட்டுப்படுத்த முடியாது.

இது ஒரு நெருக்கடியான நிலை. தீர்வு காணப்படவேண்டிய காலகட்டம். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒழுங்குகள், நடைமுறைச் சட்டங்கள் பற்றி பேசிக்கொண்டிருக்க முடியாது! பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வரை-இடைக்காலகட்டத்தில் இப்படியான சம்பவங்கள் நிகழத்தான் செய்யும்.

**அது எப்படி?**

முன்னர் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகள் சிங்கள அரசின் கொடுமை தாங்கமுடியாது இந்தியாவுக்குச் சென்றனர். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து அவர்கள் இலங்கை திரும்பினார்கள். இவர்கள் எல்லாம் எந்தச் சட்டத்தின் கீழ் இந்தியா சென்றார்கள்? எந்த குடிவரவுச் சட்டத்தின் கீழ் இலங்கை திரும்பினார்கள்?

இப்போதும் சுமார் 15 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகள் இந்தியா சென்றிருக்கிறார்கள். அவர்கள் எந்தச் சட்டத்தின் கீழ் இந்தியா சென்றார்கள்?

1987 திம்புப் பேச்சுவார்த்தை எந்தச் சட்டத்தின் கீழ் நடந்தது?

இலங்கையின் சட்டங்களையே மதிக்காதவர்களுடன் இலங்கை அரசு உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை நடத்துகிறதே! இது எந்தச் சட்டத்தின் கீழ் நியாயமானது?

ஆகவே திரு. விஜேரத்தின பொறுப்பற்ற முறையில் பேசுவதை விடுத்து பொறுப்பான முறையில் செயற்பட வேண்டும். அவர் ஒரு விதூஷகன் (ஜோக்கர்) போல் நடக்கக் கூடாது.

நான் இந்தியா செல்வது பற்றி ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவித்து விட்டே சென்றேன்.

இந்தியப் படைகள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே இலங்கையை விட்டு வெளியேறிவிடும்.

தமிழ் குழுக்கள் இடையேயான மோதலைக் காரணம் காட்டி அவர்கள் இங்கு தங்கியிருக்கும் கால எல்லையை நீடிக்கவேண்டியதில்லை.

ஆனால் தாங்கள் இலங்கையிலிருந்து வெளியேறமுன்னர், தமிழ் மக்களுக்கு அளித்த உறுதிப்படி தேவையான அதிகாரப் பரவலாக்கலை அவர்கள் எப்படியும் பெற்றுக்கொடுத்துவிட்டே செல்வார்கள்.

நாங்கள் இனிமேலும் பேச்சுவார்த்தைகளுக்காக கொழும்புசெல்லமாட்டோம். நாடு பிரியக்கூடாது என அவர்கள் (அரசாங்கம்) நினைத்தால் அவர்கள் எங்களிடம் இங்கு (திருகோணமலை) வந்து பேசலாம் என்றார். (அ-உ)


## தேவை

உதயன் நிறுவன அச்சகப் பகுதியில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை

1. **அச்சுக்கோர்ப்பாளர்**
   அச்சுக்கோர்ப்பதில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
   அனுபவத்துக்கும், திறமைக்கும் ஏற்ற சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
2. **பயிலுநர்**
   அச்சுக்கோர்த்தலைப் பயில விரும்புவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
   ஜி. சி. ஈ. சாதாரண தரத்தில் சித்தி எய்திய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தமிழ் மொழியில் விசேட சித்தி பெற்றிருக்க வேண்டும்.
   பயிலுநர் காலத்தில் படி வழங்கப்படும்.
3. **பக்கம் கட்டுநர்**
   பத்திரிகை அலுவலகங்களில் பக்கம் கட்டுவதில் முன் அனுபவம் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
   திறமைக்கும், அனுபவத்துக்கும் ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கல்வித் தகமை, தொழில் அனுபவம், நற்சான்று அத்தாட்சிப் பத்திரங்களுடன் பின்வரும் முகவரிக்கு 22-2-90க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி)

**நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.





## மின் அத்தியட்சகர் இடமாற்றம்

யாழ்ப்பாணம் பெப். 11

யாழ். மாநகரசபையில் கடந்த 8 வருடங்களாக மின் அத்தியட்சகராகக் கடமையாற்றி வந்த திரு. செல்லத்துரை ஞானசேகரம் பிள்ளை காங்கேசன்துறை பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மார்ச் முதலாம் திகதி தமது கடமையைப் பொறுப்பேற்பார். (ஒ)


## HOLY FAMILY CONVENT
Jaffna.

**PRIVATE CLASSES**

1. மனையியல் டிப்ளோமா வகுப்புகள்
2. கொம்மேர்ஷல் வகுப்புகள்

1. மனைப் பொருளியல்:
   (1) வீட்டு நிர்வாகம் (2) குடும்ப சுகாதாரம்
   (3) சமையற் கலை (4) தையற் கலை
   (5) கைப்பணி வேலைகள் (பல தரம்)
   (6) முதலுதவி ஆகியன
   தையற்கலை 3 மாதப் பயிற்சி அளிக்கப்படும்
   ✶ சான்றிதழ் வழங்கப்படும்
2. கொம்மேர்ஷல் வகுப்புகள்
   தட்டெழுத்து ஆங்கிலமும்
   சுருக்கெழுத்து தமிழும்
   கணக்கியல் – ஆங்கிலம்

பிற்மன் லண்டன் பரீட்சைகள் நடத்தப்படும்.

SISTER SUPERIOR

[2484]



## DIPLOMA IN PHARMACY
## பாமஸி பயிற்சியில் டிப்ளோமா

அரசாங்க பாமஸி பரீட்சையில் தேற இலகுவான பரீட்சை நெறி

உள்நாட்டு வேலை வாய்ப்புக்குகந்ததாக செய்முறைப் பயிற்சியுடன் கூடியது

ஆரம்பம்: 24 - Feb : 1990

உங்கள் பதிவுகட்டு

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peters Lane
Hospital Road,
JAFFNA

[C-3816]



யாழ் மக்களுக்கோர் அரிய செய்தி!
மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச நேரடி தொலைபேசிச் சேவை!**

யாழ்நகரிலிருந்தே உலகின் எந்த நாட்டிலாவது வதியும் தங்கள் உறவினர்களுடனோ நண்பர்களுடனோ உடனடியாக நேரடித் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

- நேரடியான துரித சேவை
- தெளிவான சம்பாஷணை
- நியாயமான கட்டணம்

தங்கள் சகல தொலைபேசி அழைப்புகளுக்கும் நாடுங்கள்:

## 'சர்வதேச நேரடி தொலைபேசி நிலையம்'

எஸ். பீ. எஸ். போக்குவரத்துச் சேவைக் கட்டடம்
இல, 27. விக்ரோறியா றோட்,
(ஆஸ்பத்திரி பின் வீதி)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 025 - 2850

(யாழ் நகரிலிருந்து உலக நாடுகளின் தொலைபேசிகளுக்கு நேரடியாக இணைக்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு தொலைபேசி இது மட்டுமே)

(சி- 3796)







**Typewriters FORSALE**
Standards - Portables

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்.

**FUDO ENTERPRISES**
39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[சி-3809]


## ACKNOWLEDGEMENT



VICTOR KIRUPARAJ

The death of Mr. Victor Kiruparaj, retired teacher, occurred on 4- 1- 1990. The family members sincerely thank the clergy, medical superintendent and staff mcleod hospital, Inuvil, staff St. Josephs Catholic Press, Principal and staff Chundikuli Girls College, relatives and friends who attended the funeral and others who helped them in numerous ways. Regret unable to thank all individually.

23 Third Cross Street,
Jaffna.

(C/3373)

## முதலாம் வருட நினைவு அஞ்சலி



சொரூபினி புண்ணியலிங்கம்

தோற்றம்: 1975-01-29
மறைவு: 1989-01-23

அறவா நீ
ஆடும் போது உன்
அடியின் கீழ்
''சொரூபினி'' இருக்க
பிரார்த்திக்கிறோம்.

புண்ணியலிங்கம் குடும்பத்தினர்.

(C/3374)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாடு செல்ல சீன மாணவர்மீது தடை

# கம்யூனிஸ்ட் அரசின் புதிய கட்டுப்பாடு

## 5 ஆண்டுகள் கட்டாயப் பணி

பீகிங், பெப். 10

மாணவர் மீது மேலும் பல கட்டுப்பாடுகளை சீன அரசாங்கம் கொண்டுவந்திருக்கிறது.

பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற பின்னர் 5 ஆண்டுகளுக்கு சீனாவில் கட்டாயப் பணி புரியவேண்டும் என்று புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அதன் பின்னரே மேற்படிப்பை மேற்கொள்ள வெளிநாடுகள் செல்வதற்கு சீன மாணவர் அனுமதிக்கப்படுவர் —இப்படி சீன அரசு அறிவித்தது.

சீன அரசு, மாணவர்களின் ஏனைய நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தியிருக்கிறது.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. சட்ட விரோதமான பிரசுரங்கள், சஞ்சிகைகளை வெளியிடக் கூடாது —இப்படி மாணவர்களுக்கு மேலும் சீனா உத்தரவிட்டுள்ளது.

இதனிடையில் —சோவியத் பாணியிலான அரசியல் சீர்திருத்தங்களுக்கு சீனாவில் இடமில்லை என்று பீகிங் அரசு அறிவித்திருக்கிறது.

75 ஆண்டுகால ஏகபோக அதிகாரத்தைக் கைவிடுவது என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்ததைத் தொடர்ந்து, சீனா தனது இக்கருத்தை அறிக்கையாக வெளியிட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஜனநாயக சுதந்திரம் கோரி சீனமாணவர் நடத்திய போராட்டத்தை பீகிங் அரசு, இராணுவத்தைப் பயன்படுத்தி முறியடித்தது தெரிந்ததே.

அதன்பின்னர் மாணவர் மீதான நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் உத்தரவுகளை இப்போது தான் சீனா வெளியிட்டிருக்கிறது. (எ)

### வடகொரியாவிடம் அணுகுண்டு: ஜப்பான் அச்சம்

டோக்கியோ, பெப். 10

வடகொரியாவிடம் அணுகுண்டு இருப்பதாக ஜப்பான் அச்சம் தெரிவித்திருக்கிறது.

வடகொரியாவில் அணு ஆலை ஒன்று கட்டப்பட்டு வருவதாக ஜப்பான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செய்மதிகள் மூலம் எடுக்கப்பட்ட படங்களில் இருந்து வடகொரியாவின் தலைநகர் அருகே அணு உலை ஒன்று நிறுவப்பட்டிருப்பது தெரியவந்ததாகவும் அதிகாரிகள் கூறினர்.

தென்கொரியாவில் அமெரிக்கத்துருப்புக்கள் சுமார் 40 ஆயிரம் நிலைகொண்டுள்ளன.

இதனிடையில்— இரண்டு கொரியாக்களையும் இணைக்க வேண்டும் என்று இருதரப்பினரும் வற்புறுத்தி வருகின்றனர். (எ)

## ★ உலக நாடுகளுக்கு காஷ்மீர் நிலைமையை விளக்க பெனாஸிர் தூதர்கள் விஜயம்

இஸ்லாமாபாத் பெப் 11

காஷ்மீர் பிரச்சினையில் உலக நாடுகளின் ஆதரவைக் கோருவதற்குப் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர்பூட்டோ தீர்மானித்திருக்கிறார்.

முதற்கட்டமாக திருமதி பூட்டோ விசேட தூதர்களை பல நாடுகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பிரதமர் பெனாசிரின் கடிதங்களை இத்தூதர்கள் உலகத் தலைவர்களிடம் ஒப்படைப்பர்.

இந்தியா விசேட தூதர்களை உலக நாடுகளுக்கு அனுப்பி வைத்து ராஜதந்திர நடவடிக்கைக்குப் பதிலடியாக பெனாசிரின் நடவடிக்கை அமைகின்றது.



பெனாஸிர்

இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் அடக்குமுறைகள் இடம் பெறுவதை பாகிஸ்தான் தூதர்கள் உலக நாடுகளின் தலைவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறுவர்.

## பாகிஸ்தான் அரசு வாங்கிய சீனப் போர் விமானங்கள்

இஸ்லாமபாத் பெப் 11

1987இல் செய்து கொண்ட ஒப்பந்தப்படி சீனா வழங்கிய 48 போர் விமானங்கள் கடந்த புதன் கிழமை முறைப்படி பாகிஸ்தான் விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒப்பந்தப்படி சீனா 150 எப் 7 ரக போர்விமானங்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட வேண்டும்.

இதன்படி முதலாவதுவிமானம் 1988ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு கடைசிக்குள் 150 விமானங்களும் பாகிஸ்தானுக்கு கொடுக்கப்பட்டு விடும்.

சீனா வழங்கும் போர் விமானங்கள் தாழப்பறந்து சண்டையிடும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளன.

தற்போது பாகிஸ்தான் விமானப்படையில் எப்-5, எப்-6 ரக விமானங்கள் உள்ளன. பழைய விமானங்களை அப்புறப்படுத்தவே எப்-7 விமானங்களை பாகிஸ்தான் வாங்குகின்றது. கழிக்கப்படும் எப் -6 விமானங்களை பங்களாதேஷுக்கு விற்கவும் பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தான் விமானப் படையில்உள்ளசக்தி வாய்ந்த விமானங்கள் எப் - 16 ரகம் தான். இவை மின்னல் வேகத்தில் நீண்டதூரம் சென்று தாக்கக் கூடியவை. (எ)

### ராஜீவ் கோரிக்கை

புதுடில்லி, பெப் 10

காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதிக்க நாடாளுமன்றத்தின் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்துமாறு இந்திராகாங்கிரஸ் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ராஜீவ் காந்தி கேட்டிருக்கிறார். (எ)

### விமான நிலைய புதிய பெயர்கள்

சென்னை பெப். 10

சென்னை சர்வதேசவிமான நிலையத்திற்கு 'அண்ணா' பெயரும் உள்நாட்டு விமான நிலையத்திற்கு 'காமராஜர்' பெயரும்சூட்டப்படவுள்ளது.

முதலமைச்சர் கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்று இப்பெயர்களைச்சூட்டும் படி பிரதமர் வி. பி. சிங் உத்தரவிட்டது. தெரிந்ததே. (எ)

## நெல்சன் மண்டேலா விடுதலை பெப். 16 இல் இடம் பெறுமா?

ஜோஹன்னர்ஸ்பேர்க் பெப்10

எப்போது நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்படுவார் என்பதை அறிவிப்பதை தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி கிளெர்க் 'சஸ்பென்ஸா'க வைத்திருக்கிறார்.

பெரும்பாலும் இம்மாதம் 16 ஆம் திகதி திரு. மண்டேலா விடுதலை செய்யப்படலாம் என்று அரசியல் நோக்கர்கள்கணித்துள்ளனர்.

தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா, கடந்த 27 ஆண்டுகளாக சிறையில் இருந்து வருகிறார்.

தென் ஆபிரிக்காவில் வெள்ளை நிறத்தவரின் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாக மண்டேலா கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்.

'எமது தலைவர் மண்டேலாவே வருக' என்று எழுதப்பட்ட ரீ சேட்கள், சுவெற்றர்கள் கறுப்பு இனத்தவர்கள் வாழும் நகரங்களில் ஏற்கனவே விற்பனைக்கு வந்து விட்டன.

தென்ஆபிரிக்க ஜனாதிபதி சொன்னதாவது;

நிபந்தனை இன்றி மண்டேலாவை விடுவிப்பது என்று அரசு தீர்மானித்து விட்டது. விடுதலையாகும் திகதியை மட்டும்தான் அரசு இனித் தீர்மானிக்க வேண்டியுள்ளது' (எ)

## அமெரிக்காவின் இராணுவ வலிமைதான் உலகில் ஜனநாயக அலை வீசக்காரணம்

### அதிபர் புஷ் விளக்கம்

சான்பிரான்ஸிஸ்கோபெப்.11

அமெரிக்காவின் ஆயுத வலிமை காரணமாகத்தான் உலகில் இன்று ஜனநாயக அலை வீசுகிறது.

அமெரிக்கா அதிபர் ஜோர்ஜ் புஷ் இப்படித்தெரிவித்தார்.

சோவியத் யூனியனில் ஏகபோக அதிகாரத்தைக் கைவிடுவது என்று கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்த சில மணித்தியாலங்களின் பின்னர் அதிபர் புஷ், அமெரிக்க நட்சத்திரப் போர்த் திட்ட ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பேசினார்.

திரு. புஷ் அச்சமயம் சொன்னதாவது;

இன்று உலகில் ஜனநாயகமும் சுதந்திரமும் வெற்றி நடை போடுவதற்குமுக்கிய காரணமாக, பயமுறுத்தல்களுக்குத் துணிந்து சமாதானம், ஸ்திரம் ஆகியவற்றுக்காக அமெரிக்கா காட்டிய திறைமையே.

அரசியல் சீர்திருத்தங்களை திரு. கோர்பச்சேவ் எடுத்து வந்தாலும் இராணுவ ரீதியில் பெரிய பயமுறுத்தலாக சோவியத் யூனியன் இன்னும் இருக்கிறது.

அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக கம்யூனிய நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கண்டுநாம் மயங்கி விடக்கூடாது. சோவியத் யூனியனின் தலைமையிலான வார்சோ நாடுகள் அணி சிதறியுள்ளது. இதை வைத்து



ஜோர்ஜ் புஷ்

அமெரிக்கா தனது பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்க முடியாது. சோவியத்யூனியன் இன்னும் இராணுவ ரீதியில் பலம் பொருந்திய நாடுதான்.

நட்சத்திரப் போர்த்திட்டத்தை செயற்படுத்துவது ஆயுதக் குறைப்புக்கு வழிவகுக்கும்.

இப்படி அதிபர் புஷ் சொன்னார்.

## ருஷ்டி மீதான மரணதண்டனை ஈரான் மீண்டும் ஊர்ஜிதம்

தெஹ்ரான், பெப். 10

லண்டன் எழுத்தாளர் சால்மன் ருஷ்டி மீதான மரண தண்டனை உத்தரவு இன்னும் அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் சிரேஷ்ட சமயத் தலைவர் அலி காமேனி இதனைக் கடந்த வெள்ளிக்கிழமை சமய நிழ்ச்சி ஒன்றில் அறிவித்தார்.

இஸ்லாத்தை நிந்தித்து ''சாத்தானின் கவிதைகள்'' என்ற நூலை எழுதியதற்காக மறைந்த ஈரானிய ஆத்மீகத் தலைவர் கொமேனி சால்மன் ருஷ்டிமீது மரணதண்டனை விதித்தார்.

கடந்த ஓராண்டுக்கு மேலாக தலைமறைவாக லண்டனில் வாழ்ந்து வரும் ருஷ்டி, அண்மையில் லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், முஸ்லிம்கள் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும் என்று கேட்டிருந்தார். [எ]

## 33 வருடகால இடைவெளியின் பின் செக் - இஸ்ரவேல் ராஜரீக உறவு

பிராக், பெப். 10

இஸ்ரவேலுடன் முழு அளவிலான ராஜரீக உறவை செக்கோஸ்லேவேகியாநேற்று மீண்டும் ஆரம்பித்தது.

இது சம்பந்தமான உடன்பாடு செக் தலைநகர் பிராக்கில் இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களினால் கைச் சாத்திடப்பட்டது.

1967 இல் இஸ்ரவேல் அரபு நாடுகள் மீது நடத்தி யுத்தத்தைத் தொடர்ந்து, அதனுடனான ராஜந்திரஉறவுகளை சோவியத்யூனியன் தலைமையிலான வார்ஸோ நாடுகள் முறித்தன.

கடந்த ஆண்டு இறுதியில் ஹங்கேரி, இஸ்ரவேலுடன் மீண்டும் ராஜதந்திர உறவை ஆரம்பித்தது.

இஸ்ரவேலுடன் ராஜதந்திர உறவை மீண்டும் ஆரம்பித்த இரண்டாவது வார்ஸோ நாடு என்ற இடம் செக்கோஸ்லேவேகியா வுக்குக் கிடைத்துள்ளது. (எ)

### தேர்தல் பெப் 12 இல்

புதுடில்லி, பெப் 10

58 உறுப்பினர்களைக் கொண்ட மணிப்பூர் சட்டசபைத் தேர்தல் வருகிற 12 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

அடுத்த நாள் வாக்குகள் எண்ணப்படுவது ஆரம்பமாகும். (எ)

## அணிந்திருந்த ஆடையைத் தின்று உயிர் தப்பிய மாலுமி

ஜகார்த்தா, பெப். 10

பத்துநாட்களாக தான் அணிந்திருந்த ஆடைகளையே தின்று உயிர்தப்பிய கப்பல் மாலுமி ஒருவர் பற்றிச் செய்தி வெளியாகியுள்ளது.

125 தொன் எடையுள்ள 'கலிகர்' என்ற சரக்குக் கப்பல் புயலில் சிக்கி ரிமோர் கடலில் மூழ்கியது.

உயிர்தப்பிய 22 வயது மாலுமி தாரோட்ஜி சொன்னதாவது;

மூழ்கிய கப்பலில் இருந்து நானும் மற்றும் 15 பேரும் தப்பினோம்.

ஆனால் என்னைத்தவிர ஏனையோர் உணவின்றி நடுக்கடலில் இறந்துவிட்டனர்.

நான் மட்டும் அணிந்திருந்த ஆடைகளைத் தின்று உயிர்தப்பினேன்.

இப்படி அவர் சொன்னார். (எ)

## 84 வயதுப் பாட்டியின் விசித்திர ஆசை

ஜெரூசலம், பெப். 10

யூத இனத்தைச் சேர்ந்த 84 வயது பாட்டியான றுத் ட்ராபெல்ஸி இஸ்ரவேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடர்ந்திருக்கின்றார்.

பழுதடைந்த காலை துண்டிக்கும் சத்திரசிகிச்சை செய்ய வேண்டாம் என்று ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு உத்தரவிடுமாறு இப் பாட்டி தனது மனுவில் கூறியிருக்கிறார்.

பாட்டி தங்கியுள்ள டைபீரியாஸ் ஆஸ்பத்திரிக்குச் சென்று நீதிபதி விசாரணை நடத்தினார்.

அப்போது, பாட்டி தனது சாட்சியத்தில், நான் சொர்க்கத்துக்கு எனது சொந்தக் கால்களால் நடந்து செல்ல வேண்டும். ஆகவே எனது காலை துண்டிக்கக் கூடாது- என்று சொன்னார்.

பாட்டியின் மனநிலை பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படி வைத்திய அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நீதிபதி வழக்கில் தீர்ப்பளிப்பதை வருகிற வியாழக்கிழமைக்கு ஒத்திவைத்தார். (எ)

## ஸ்ரீராமர் ஆலயம் கட்டுவது 4மாதங்களுக்கு ஒத்திவைப்பு

அயோத்தியில் ஸ்ரீராமர் பிறந்த இடத்தில் ஸ்ரீராமர் ஆலயம் அமைக்கும் திட்டத்தை நான்கு மாதங்களுக்கு ஒத்திவைப்பது என்று இந்து விஷ்வ பரிஷத் முடிவு செய்திருக்கிறது-

இம்மாதம் 14 ஆம் திகதி ராமர் ஆலயம் கட்டும் வேலைகளை ஆரம்பிப்பது என்று இந்து விஷ்வ பரிஷத் முன்னர் முடிவுசெய்திருந்தது.

பிரதமர் வி. பி. சிங்கின் வேண்டுகோளை அடுத்து ஒத்திவைக்கும் முடிவு எடுக்கப்பட்டது. (எ)

## அரசியல் கைதிகள் விடுதலை நிக்கரகுவா நடவடிக்கை

மனாகுவா, பெப். 10

ஆயிரத்து இருநூறு அரசியல் கைதிகளை நிக்கரகுவா அரசு நேற்று விடுதலை செய்தது.

இவர்களில் பெரும்பாலோர் அமெரிக்க ஆதரவுடன் இடதுசாரி சான்டினிஸ்ட் அரசுக்கு எதிராகப் போராடிவந்த வலதுசாரி கொன்றா கெரில்லாக்கள்.

விடுதலையானோரில் பெரும்பாலோர் பத்து ஆண்டுகளுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர்.

இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை ஒட்டி, இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### குற்றச்சாட்டு

கிழக்குபேர்லின் பெப். 11

கிழக்கு ஜேர்மனியில் அண்மையில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக்கப்பட்ட எரிச் ஹொனேக்கர் தனது வங்கிக் கணக்கில் 180 கோடி ரூபா [illegible] குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. (எ)


வரையறுத்த

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம்

(யா 1662 — 05. 12. 1979)

**வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்**

| | |
|---|---|
| வெற்றுச்சாக்குத் தொகை | : 4595 |
| விண்ணப்பப் படிவம் | : 5/- |
| மீளளிப்பு வைப்புப்பணம் | : 300/- |
| முடிவுத் திகதி | : 17. 02. 1990 நண்பகல் 12.00 மணி |

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு'' எனக் குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு, பல. நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்

நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம்,
நெடுந்தீவு.
09. 02. 1990.

(C/3823)



பிரயாணம்! பிரயாணம்!! பிரயாணம்!!!

**'M' THREE TRAVELS**

வழங்கும்

**உடனடிப் பிரயாணம்**

சவூதி அரேபியா, மாலைதீவு

● சவூதி அரேபியா (SAUDI ARABIA)

| | | வெற்றிடம் | சம்பளம் |
|---|---|---|---|
| 1. | Equipment operator (Heavy) (கனரக உபகரண இயக்குனர்) | 5 | 650 S.R |
| 2. | Equipment Operator (Light) (கனம் குறைந்த உபகரண இயக்குனர்) | 5 | 550 S.R |
| 3. | Irrigation Repairman | 4 | 350 S.R |
| 4. | Landscaping Foreman (Driver) | 6 | 550 S.R |
| 5. | Irigation Foreman (Drive) | 6 | 550 S.R |
| 6. | Landscaping Lerdman (Driver) | 14 | 450 S.R |
| 7. | Mason (மேசன்) | 2 | 450 S.R |
| 8. | A/C Technician | 4 | 1000 S.R |
| 9. | Diesel Technician | 4 | 900 S.R |
| 10. | Control Technician | 3 | 1000 S.R |
| 11. | Fire Alarm Technician | 3 | 1000 S.R |
| 12. | Electrician (Building) (கட்டிட மின் இணைப்பாளர்) | 10 | 750 S.R |
| 13. | Cleaner (சுத்திகரிப்பாளர்) | 50 | 325 S.R |

● மாலைதீவு (MALDIVES)
(பெண்கள் மட்டும் உடனடிப் பிரயாணம்)

TAILORS (தையல்) 80 U,SD / 70 U,SD
HELPERS (தையல் உதவியாளர் மட்டும்)

★ மாலைதீவுக்குச் சென்ற முதற்கட்ட வேலையாட்கள் அங்கு சென்று வேலை ஆற்றுகிறார்கள்.

★ இரண்டாம் கட்டம் வேலை ஆட்கள் இம்மாதம் 16 ஆம் திகதி மாலைதீவுக்கு வேலை ஏற்க செல்ல உள்ளார்கள்.

★ மூன்றாம் கட்டமாக போக உள்ளவர்கள் இம்மாதம் 30 ஆம் திகதி முடிவதற்குள் எம்மிடம் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். புதிதாக போக உள்ளவர்கள் எம்மிடம் பாஸ்போட் (Passport) மற்றும் 10 படங்களுடன் உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;

*'M' Three Travel*

தலைமை அலுவலகம், 'இந்திர பவனம்' சோதி வீதி, காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்: இல. 1, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/3830)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பல் கட்டுபவரும்,
கண்ணாடி தருபவரும்!



கிளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

# உதயன்

ஞாயிற்றுக்கிழமை 11 - 02 - 1990

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

## உரிமைகளை வென்றெடுக்கும் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றோர், குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.)

திரு. தீபன் அங்கு மேலும் பேசுகையில் —

நமது போராட்டத்தில் இதுவரை 24 பெண்போராளிகளை இழந்திருக்கிறோம்.

மேஜர் சோதியா 1986 அக்டோபரில் மன்னாரில் விக்ரரின் தலைமையில் நடந்த தாக்குதலிலும், மற்றும் யாழ் கோட்டை தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதலிலும், கல்லுண்டாயில் இந்தியப் படையின் கவச வாகனத் தாக்குதலிலும் முன்னின்று பங்கேற்றவர். அவரது இயற்கை மரணம் எமது இயக்கத்திற்குப் பேரிழப்பாகும் — என்றார்.

வல்வைப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. வ. அனந்தராஜா பேசும்போது,

''போராட்டமானது ஆயுதத்தால் மட்டும் வெற்றிதரக் கூடியதல்ல. பொதுமக்களின் பங்களிப்பும் அதற்கு மிகவும் அவசியமானது. மேஜர் சோதியா இரண்டு நாடுகளின் இராணுவங்களுடன் போரிட்டு வெற்றிகளைக் குவித்தவர்'' என்றார்.

ஆசிரியர் திரு. கருணாநிதி, நெல்லியடி பிரஜைகள் குழுத் தலைவர் திரு. கணபதிப்பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியாக மேஜர் சோதியாவின் இறுதி ஊர்வலம் வீடியோவில் திரையிட்டுக் காட்டப்பட்டது. அஞ்சலிக் கூட்டத்திற்குப் பெருந் திரளான மக்கள் வந்திருந்தனர்.

இதேவேளை மேஜர் சோதியாவின் நினைவாக நேற்று வடமராட்சியில் பல பகுதிகளிலும் இரத்ததானம் வழங்கும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (அ-9)

## வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 07-02-1990 அன்று தலைவர் திரு. சு. இராஜேந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்கள் அக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

- தற்போதைய விலைவாசிகள் அதிகரிப்பின் விளைவாக கட்டணங்களை எதிர்வரும் 01-03-1990ல் இருந்து அதிகரிப்பது.
- புதன், ஞாயிறு பூட்டப்படும் நிலையங்கள் அவ்வொழுங்கின் படியே தொடர்ந்தும் பூட்டப் பணித்தல்.
- பண்டிகைத் தினங்களுக்கு முன்பாக வரும் ஞாயிறு, புதன் கிழமைகளிலும் நெருக்கடி நிலைமையால் ஒரு நாளுக்கு மேற்பட நிலையங்கள் மூடிக்கிடக்க நேர்ந்தால் பின்பாக வரும் ஞாயிறு, புதன்கிழமைகளிலும் நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.
- அதிகரிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதங்கள் கீழ்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| ஹீட்டர் பிடித்து முடி, சேவ் | 20.00 |
| முடிவெட்டி ஹீட்டர் பிடிக்க | 16.00 |
| ஷேவ், தலை முடி இரண்டும் | 15.00 |
| தலை முடி மட்டும் | 13.00 |
| ஷேவ் மட்டும் | 5.00 |
| பிளேட் ஷேவ் | 6.00 |
| தாடி வைக்க | 7.00 |
| சிறுவர்களுக்கு | 10.00 |
| சிறு குழந்தைகளுக்கு | 8.00 |
| **பெண்கள்** | |
| பெண்களுக்கு தலை முடி | 30.00 |
| பெண் பிள்ளைகளுக்கு | 25.00 |
| பெண் குழந்தைகளுக்கு | 15.00 |
| ஹீட்டர் பிடிக்க மட்டும் | 5.00 |

தலைவர்
சு. இராஜேந்திரம்

செயலாளர்
செ. சிவராசா

[சி-3827]

## மரண அறிவித்தல்

கலாநிதி

### முகாந்திரம் E. P. இராசையா J.P.

(கமாண்டர் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்)

ஈவினையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக்கொண்டவருமான Dr. முகாந்திரம் E.P. இராசையா அவர்கள் 10 - 02 - 1990 சனிக்கிழமை 11 மணியளவில் காலமாகிவிட்டார். அன்னார் திருமதி அன்னரெத்தினம் அவர்களின் அன்புக்கணவரும், இராசேந்திரம் (யாழ் மாநகரசபை), மகேந்திரன், குலேந்திரன், காலஞ்சென்ற இந்திராணியின் அன்புத்தந்தையும், புஷ்பராணி, சிவபாக்கியம், பத்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்ற E.P செல்லையா E.P கனகசபை, தங்கம்மா, சபாபதிப்பிள்ளை, காலம் சென்ற செல்லம்மா செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானரத்தினம், கந்தையாவின் அன்பு மைத்துனரும், இந்திராதேவி, இந்திரமலர், இந்திரஜோதி, ஜெகதீசன், ஜெகராஜன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும், ராஜேஸ்வரன், அருந்ததி, நிரூபா, சிவகணேசன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று 11- 02- 1990 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இறுதியாத்திரை 10 மணியளவில் ஆரம்பமாகி தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

179, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(2497)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 2 - 1990 இல் வெளியிடப்பட்டுள்ளது.

## 4 அம்சங்கள் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடன் உடனடியாகச் சென்று சேர்ந்துகொண்டார்.

திரு பிரபாகரன் தெரிவித்த விடயங்கள் குறித்து நேற்றுமாலை திரு. அன்டன் பாலசிங்கத்துடனும், பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதற்காக தலைநகர் வந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மற்றைய பிரமுகர்களுடன் திரு. யோகி ஆலோசனை நடத்தியதாகத் தெரியவந்தது.

அரசுக்கும்—விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொழும்புக்கு வெளியே நடைபெற்றுவருவதாகவும் தெரியவந்தது. (உ)

## ஆரசைக் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புத் துறைமுகத்தில் நின்றன.

இந்தியத் துருப்புக்களின் முதல் தொகுதி தற்செயலாகத்தான் இலங்கை வந்தது.

ராஜீவ் இலங்கையில் நின்ற சமயத்தில் வன்செயல் வெடித்தது.

கொழும்பில் அதிக பொலீஸார் இல்லை என்று பொலீஸ் மாஅதிபர் சொன்னார்.

''நான் உதவட்டுமா?''— இப்படி ராஜீவ்காந்தி கேட்டார்.

அவருக்கு எனது கஷ்டங்களைச் சொன்னேன்— எமது துருப்புக்களை ஏற்றி இறக்க சில போக்குவரத்து விமானங்களை தந்து உதவும்படி கேட்டுக் கொண்டேன்.

அப்போது ராஜீவ், ''இலங்கை தனது துருப்புக்களை தென்மாகாணம் அனுப்புவதால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உதவுவதற்கு ஆட்பலத்தை அனுப்பி வைக்கட்டுமா?''— என்று கேட்டார்.

உடன்படிக்கையின் கீழ் இது சாத்தியமானதே.

''விமானங்கள் வெறுமனே தானே வருகின்றன. கொஞ்சம் துருப்புக்களையும் அனுப்பிவைத்தால் என்ன?''— என்று நான் சொன்னேன்.

இப்படித்தான் இந்தியத் துருப்புக்கள் இலங்கை வந்து சேர்ந்தன.

''1987 வடமாராட்சி நடவடிக்கையின் போது ஒரு விமானத்தை இழந்து விட்டோம். இன்னொரு விமானத்தை இழந்துவிட்டால் விமானப் படையினர் பணிபுரிய முன்வரமாட்டார்கள்''— என்று பாதுகாப்புப் படையினர் அறிவித்தனர். விடுதலைப் புலிகளிடம் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் இருந்திருப்பின் நாம் ஆகாயத் தாக்குதல் வல்லமையை இழந்திருப்போம்.

—இப்படி திரு. ஜெயவர்த்தனா சொன்னார். (உ)

# மரண அறிவித்தல்கள்

## திரு. கந்தையா ஆறுமுகம்

(முன்னாள் ஓய்வு பெற்ற புகையிரத திணைக்கள லிகிதர்)

முன்னாள் ஆனைப்பந்தியடி வாசியும் தற்போது நாயன்மார்கட்டில் வசிப்பவருமாகிய திரு. கந்தையா ஆறுமுகம் அவர்கள் 10- 2- 90 சனிக்கிழமை காலை 5 மணியளவில் காலமானார். அன்னார் காலம் சென்ற திருமதி விஜயலட்சுமி ஆறுமுகத்தின் அன்புக் கணவரும், இந்திராணியின் அன்புத் தந்தையும், சிவானந்தா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம்) அவர்களின் அன்பு மாமனாரும், நிருத் தாஞ்சலியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 11- 02- 90 காலை 10 மணியளவில் 41/60, ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, நாயன்மார்கட்டு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: மகள், மருமகன்

41/60 ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(2282)

## திருமதி தங்கம்மா சுப்பையா

ஆனைக்கோட்டை பொன்னையா வீதியைச் சேர்ந்த தங்கம்மா சுப்பையா 10- 02- 90இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற உரும்பிராய் தெற்கு மலாயன் பென்சனியர் மார்க்கண்டு சுப்பையாவின் அன்பு மனைவியும் புஸ்பதேவி, பூமாதேவி, சிவராசா (முன்னாள் மின்சாரசபை பொறியியலாளர், அவுஸ்ரேலியா), காலம் சென்ற லங்காதேவி, கமலாதேவி, ஆகியோரின் தாயாரும், திருநாவுக்கரசு, நாகரட்ணம் (இளைப்பாறிய தபால் அதிபர்), திரவியநாதன் நவரட்ணம் (டென்மார்க்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 11- 02- 90 இன்று காலை 10. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு. சிவராசா

பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை,

(2285)

மாதகல்

## சிங்காரம்பிள்ளை மாரிமுத்து

(மலேசியா பென்சனியர்)

மாதகல் புனித அந்தோனியார் வீதியைச் சேர்ந்த சிங்காரம்பிள்ளை மாரிமுத்து (மலேசியா பென்சனியர்) 09-02-1990 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சிங்காரம்பிள்ளை திருமதி தங்கம்மா அவர்களின் ஒரே மகனும் காலஞ்சென்ற திருமதி அழகம்மாவின் அன்புக் கணவனும் சுலோசனா (மலேசியா) சவுந்தரியராணி (மலேசியா), வினோதரதி (மானிப்பாய்), ஜெயன் (லண்டன்), ஜெயதேவி (பினாங்) இவர்களின் அருமைத் தந்தையும் K.S.S. நாதன் (மலேசியா), A. ஜெயரட்ணம் (மானிப்பாய்), M. கோபால் (பினாங்), ஜெயன்லில்லி (லண்டன்), இவர்களின் அன்பு மாமனாரும், பிரேமா, ரூபி, றேனா, செந்தில், சஞ்சீவ், விக்னேஸ்வரன், வனிசா, கன்சராஜ், லக்சிறா, நீனா இவர்களின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் புனித அந்தோனியார் வீதி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்திற்கு இன்று 11- 02- 90 காலை 11 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:—
ச. ஜெயதாசன் (சூரி)

(2488)

## சுப்பிரமணியம் பொன்னையா

சுப்பிரமணியம் பொன்னையா காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதியினரின் மகனும், சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் திரு. பத்மநாதன் (இ. போ. ச.), பத்மாவதி (யாழ் போதனா வைத்தியசாலை), சற்குணம், தர்மபூபதி (U.K), இராசேஸ்வரன் (பேர்லின்), ஏகேஸ்வரன் (U.K), பத்மலோசனி (Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (யாழ். போதனா வைத்தியசாலை), கா. லோகேந்திரன் (அரியாலை நவீன அரிசி ஆலை உரிமையாளர்), காலஞ்சென்ற நடராசா வரதராசன், ஜெயானந்தன் (ஜேர்மனி), திருமதி பத்மநாதன் இந்திராணி, திருமதி இராசேஸ்வரன் சரோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 39, விபுலானந்தர் வீதி, அரியாலையிலுள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து தகனக் கிரிகைகளுக்காக 11-02-90 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சித்துபாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
பொ. பத்மநாதன்

(2496)

## மு. சோ. சண்முகராசா

வேலணை மேற்கை பிறந்தகமாகவும், நாரந்தனையை வாழ்விடமாகவும் கொண்ட திரு. மு. சோ. சண்முகராசா 10-02-90-இல் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் [12-02-90] திங்கட்கிழமை காலை நாரந்தனையில் நடைபெறவுள்ளது. விபரம் நாளைய உதயனில் வெளிவரும்.

[1927] தகவல்: திருமதி எ. சண்முகராசா

## திரு. இராமலிங்கம் அப்பாத்துரை

திரு. இராமலிங்கம் அப்பாத்துரை அவர்கள் 10 – 02 – 1990 இல் காலமானார். அன்னார் முன்னை நாள் இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளரும் (கொமேசல் கொம்பனி) முன்னாள் நீர்வேலி கிராம சபைத் தலைவரும் ஆவார்.

இவர் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் இளைப்பாறிய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் பணியாற்றிய திரு. சுப்பிரமணியத்தின் அன்புத் தந்தையும், அரசகுமார், பத்மகுமார், நந்தகுமார், சிவகுமார் (பிரதேச சபை, நல்லூர்) விஜயகுமார், சந்திரகுமார், சாந்தினி பரமேஸ்வரன் (இலங்கை வங்கி கொழும்பு) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (11-02-90) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சுப்பிரமணியம்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

[2489]

## சுப்பையா திருநாவுக்கரசு

[பொலிஸ் சார்ஜன்ட்]

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் சுப்பையா திருநாவுக்கரசு [10-2-90] சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் கணவரும் ஜெயபாலன் (கனடா), ஜெயந்தி, சறோஜா (சண்டிலிப்பாய் இ. ம. வித்தியாலயம்), வசந்தி (தேசிய வீடமைப்பு அதிகார சபை, மாங்குளம்), சாந்தி (நித்தியா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), கருணாகரன், காலஞ்சென்ற பாலேந்திரா ஆகியோரின் அருமைத் தந்தையும் நீலாம்பிகை (கனடா), சிவலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [11-2-90] ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும், அனைவரும் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- செல்வி தி. வசந்தி

## தருமலிங்கம் நடராசா

(முன்னாள் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கக்கிளை முகாமையாளர்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த தருமலிங்கம் நடராசா சனிக்கிழமை (10- 2- 90) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம் திருமதி த. சின்னப்பிள்ளையின் மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலன், குணசீலன், தாரணி, தர்மினி, மயூரனி ஆகியோரின் தந்தையும், மகேந்திரராஜா (ஆசிரியர் மன்னார் சென் சேவியர்), சோதிராஜா (பிரான்ஸ்), தவராஜா, பிரபா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், திருமதி கண்மணி கனகரத்தினத்தின் சகோதரரும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் மைத்துனரும், சஜீவன் (பிரான்ஸ்) இன் தாத்தாவும், கணேஸ்வரன் (பிரான்ஸ்), சதா (ஆசிரியை மன்னார் பள்ளிமுனை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிறு (11 - 2-90) பகல் 12 மணியளவில் இணுவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்,
க. மகேந்திரராஜா.

(1966)

## செல்வி சிந்துஷா

செல்வி ப. சிந்துஷா காலமானார். இவர் திரு. க. பஞ்சலிங்கம், திருமதி பஞ்சலிங்கம் சத்தியபாமா ஆகியோரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கார்த்திகேசு, திருமதி கா. மனோன்மணி, திரு. நா. கணேசு, காலஞ்சென்ற திருமதி க. அன்னம் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல்லத்தில் நடைபெற்று இன்று (11-2-90) காலை 10-30 மணியளவில் நாவண்டமுனை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாகதம்பிரான் கோவிலடி,
8ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(2498)

தகவல்:
வை. கனகசுந்தரம்
(அருணகிரி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org